தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை



வருடாந்த அறிக்கை

2021

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

எமது நோக்கு

“தெங்குக் கைத்தொழிலின் மொத்தத் தேசிய உற்பத்திக்காக
பெருந்தோட்டக் கைத்தொழில் துறை ஊடாக உயரிய
பங்களிப்பை வழங்குதல் மற்றும்
உற்பத்தி, விற்பனை பல்வகைத் தன்மையின் போது
கோளமய தலைமைத்துவதுடன் செயற்படல்.”

எமது பணிக்கூற்று

மனைப் பயன்பாடு மற்றும் கைத்தொழிலிற்காக
தெங்கு மற்றும் தெங்கு உற்பத்தி விநியோகத்தை
உறுதிப்படுத்துவதன் மூலம்,
தெங்குக் கைத்தொழிலின் நீண்டகால வர்த்தக
உற்பத்தித் திறன், நிலைபேண்தகு மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு
உயரிய பங்களிப்பினை வழங்குவதற்காக வசதிகளை வழங்குதல்.

அறிமுகம்

மொத்தத் தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்திக்காக 1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தில் "தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை எனக் கருதப்படும் (இதனகத்துப் பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பிடப்படுவது) அதிகாரசபை தாபிக்கப்படுதல் வேண்டுமென்ற ஆகிய 111 ஆம் பகுதியில் 24 வது வாசகத்திற்கு அமைய தாபிக்கப்பட்ட பிரதான நிலையியற் சபை நிறுவனம் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை பணிகள் சட்டத்தின் 30(1) வாசகத்திற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

(அ) தெங்குக் கைத்தெழில் மற்றும் தெங்குச் செய்கையில் மேற்கொள்ளப்படும் காணிகள் மற்றும் தெங்குச் செய்கைக்கான காணிகள் பொருளாதார ரீதியில் பயன்படுத்துவது தொடர்பில் அபிவிருத்தி முன்னுரிமை தொடர்பாக தீர்மானம் எடுத்தல் ,அத்துடன் கொள்கைகளை வகுப்பதற்காக அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

(ஆ) அவ்வாறு தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு அமைவாக கருத்திட்டங்கள், பிரேரணைகள் தயாரித்தல் அல்லது தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

(இ) அவ்வாறு தயாரிக்கப்படும் கருத்திட்டங்கள் மற்றும் பிரேரணைத் திட்டங்களை அமுல்படுத்தல் அல்லது அமுல்படுத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்குதல்

(ஈ) இச் சட்டத்தின் கீழ் அமைச்சரினால் தாபிக்கப்பட்டுள்ள சபைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

(உ) சபைகளின் வருடாந்த வரவு செலவினை அங்கீகரித்தல் மற்றும் அவர்களுக்கு நிதியத்தை வழங்குதல்.

(ஊ) உரிய முகாமைத்துவ கணக்கீட்டு முறைகளை வகுத்தல், அமுல்படுத்தல், முன்னெடுப்பதற்காக சபைகளுக்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

(எ) அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் சபைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

(எ) அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் சபைகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

(ஐ) தெங்குக் கைத்தொழில் அல்லது அதன் உற்பத்தி தொடர்பில் ஏதேனும் ஒரு துறை அல்லது தெங்கு செய்கை மூலம் மேற்கொள்ளப்படும் காணி அல்லது தெங்கு செய்கைக்காக காணிகளை பயன்படுத்துவது தொடர்பில் விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் எவரேனும் ஒரு நபருக்கு அல்லது சபைக்கு (கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத) நிதி மற்றும் ஏனைய எந்த முறையிலேனும் உதவிகளை வழங்குதல் மற்றும் அவ்வாறான ஆராய்ச்சி பணிகளின் இணைப்புக்களை மேற்கொள்ளல்.

(ஒ) அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் சமமான உரிமை மற்றும் பணிகளை நிறைவேற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் ஒத்துழைப்புகளை எட்டுதல்.

(ஓ) தெங்குக் கைத்தொழில் மீது தாக்கம் செலுத்தக்கூடிய அல்லது உரிய சகல விடயங்கள் தொடர்பிலும் அமைச்சருக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

(ஔ) தெங்குக் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மீள் உயிரூட்டுவதற்கு தேவையானதென அதிகார சபையினால் கருதப்படுகின்ற விடயங்கள் அனைத்தையும், அமுல்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்.

அதிகாரசபையின் அதிகாரங்கள், சட்டத்தின் 31 ஆம் வாசகத்திற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

31 (1) ஆம் அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையானது என அல்லது பொருத்தமானதென அல்லது அது சார்ந்த சகல விடங்களையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரசபைக்கு அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உப வாசகத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்திட்டத்திற்குப் பாதிப்புக்களின்றி 22 (2) ஆம் வாசகத்தின் மூலம் ஏற்பாடுகள் அளிக்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களும் சபைக்கு இணையாக, அதிகாரசபைக்கும் இருத்தல் வேண்டும்.

(3) அமைச்சரினால் பொருத்தமானது எனக் கருதப்படும் வேளையில் அவரினால் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் மேற்கொள்ளப்படும் கட்டளையின் மூலம் 23 ஆம் வாசகத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்கள் மூலம் ஒன்று அல்லது பலவற்றின் அல்லது அதில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதியினை சபைக்கு இணையான வகையில், அதிகார சபைக்கு பொறுப்பளிக்க முடியும்.

தெங்கு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்களில் மொத்தத் தேசிய உற்பத்திக்கு வருடாந்தம் பாரிய பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதனால் இதுவரை பதிவு செய்யப்பட்ட அதிகூடிய ஏற்றுமதி வருமானமான ரூபா.166 பில்லியன் பெற்றுக்கொள்வதற்கு இயன்றுள்ளதுடன், அது 36% ஆன வளர்ச்சியாகும்.

அமைச்சினால் தெங்கு கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பில் பிரதான கொள்கைகளை இனங்கண்டு வகுக்கும்போது, அதற்காக ஒத்துழைப்பு வழங்கும் பணிகளை மேற்கொளவ்தற்கு மேலதிகமாக தெங்குக் கைத்தொழில் செயற்பாடுகள் மற்றும் விற்பனைப் பிரிவினை அபிவிருத்தி செய்கையிலும், மேற்பார்வை செய்கையிலும் செயற்பாட்டுப் பணிகளை அமுல்படுத்துவதற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு, தர நிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவு என 05 செயற்பாட்டுப் பிரிவுகளை கொண்டமைந்துள்ளதுடன், அவ்வப் பிரிவுகளுக்குப் பொறுப்பாகப் பணிப்பாளர்கள் செயற்படுகின்றனர். இப் பணிகளை மேற்கொள்ளும் போது பொறியியல் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு மேற்கூறப்பட்ட பிரிவுகள் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

தலைவர், பிரதான அதிகாரியாக செயற்படுவதுடன் அதிகாரசபையின் பணிகளை வழிநடத்துதல், மேற்பார்வை, பணிப்பாளர் சபையினால் வகுக்கப்படும் கொள்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவது பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு, தர நிர்வாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு, விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, நிர்வாகப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவின் பணிப்பாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இவ் அதிகார சபையின் அங்கீரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 259 பேர் ஆகும். 2021 ஆம் ஆண்டின் சேவையில் ஈடுபட்ட எண்ணிக்கை 207 பேர் என்பதுடன் இவ் ஊழியர்களில் 36 பேர் முகாமைத்துவ மட்டத்தில் உள்ளவர்களாவார்கள்.

2021 சனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

1	திரு. ஜயந்த விக்கிரமசிங்க- தலைவர்	2021.06.31 வரை
	திரு. கீர்த்த ஊரீ வீரசிங்க – தலைவர்	2021.07.01 தொடக்கம்
2.	திரு. என்.எஸ்.வனசிங்க	2021.06.31 தொடக்கம்
3.	திருமதி.டி.எஸ்.விஜேசேகர	2021.07.31 ஆம் திகதி தொடக்கம் 2021.08.30 வரை
4.	திருமதி.ஆர்.பீ.கஸ்தூரிஆரச்சி	2021.09.01 ஆம் திகதி தொடக்கம்
5	திருமதி.அய்.ரீ.நிமேஸா மென்டிஸ்	
6.	திரு. தினேஸ் பிரனாந்து	
7.	திரு. பிரியலத் கிம்பிய ஹெட்டிகே	
8.	திரு. ஜகத் சந்தன தல்கஸ்துவ	
9.	திரு. உபாலி தம்மிக த சில்வா	
10.	திருமதி. ஏ.வீ.கே.மாதவி ஹேரத்	
11.	வைத்தியர் சாரங்க அலஹபெரும	

தலைவர் உட்பட பிரிவுக்கான தலைவர்கள்

1	திரு. ஜயந்த விக்கிரமசிங்க- தலைவர்	-2021.06.31 வரை
	திரு. கீர்த்தி ෆ ீ வீரசிங்க	-2021.07.01 தொடக்கம்
2.	திரு. தசித நிரோஷன திருமதி சுமுது பீ வித்தானகே	-பணிப்பாளர் நாயகம் 2021.09.27 தொடக்கம்
3.	திருமதி. எஸ்.எஸ். புரசிங்க	-பணிப்பாளர் (தர நிருவாகம் மற்றும் தரப் பாதுகாப்பு)
4.	திருமதி. எம்.பீ.சந்தியா காந்தி	-பணிப்பாளர் (நிதி)
5.	திரு. பி.ஏ.எஸ்.கே. சம்பத் சமரவிக்ரம	-பணிப்பாளர்(விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி)
6.	திரு.பீ.எதிரிமான்ன	-பணிப்பாளர்(செயற்பாட்டு அபிவிருத்தி)
7.	திரு.எஸ்.டப்.ரசிகா	-பணிப்பாளர் (நிரிவாகம்)
8.	திரு.டப்.எம்.ீ.எஸ்.வீரசுரிய	- உள்ளக கணக்காய்வாளர்

தலைவர் ஆய்வு

கடந்த காலத்திலிருந்து இலங்கையின் உணவு முறையுடனும், கலாசாரத்துடனும் இணைந்திருந்த தென்னை மரமானது, தற்போது எமது நாட்டின் பொருளாதாரப் பயிர்ச் செய்கையில் முக்கியமான ஒன்றாக மாறியுள்ளது. பல குடும்பங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தென்னைத் தொழிலைச் சார்ந்திருக்கின்றன, அதே சமயம்தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதி நாட்டிற்கு அந்நியச் செலாவணியின் முக்கிய ஆதாரமாக உள்ளது.

வருடாந்தம் 3,000 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய் உற்பத்தியுடன், உலக சந்தைக்கு தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கிடையில் நான்காவது நாடாக இலங்கை உள்ளது. மொத்த தேங்காய் உற்பத்தியில் இருந்து சுமார் 1800 மில்லியன் தேங்காய்கள்மனைச் சார்ந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றன, மீதமுள்ளவற்றை தெங்கு உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களான உலர்த்தியதேங்காய், தேங்காய் பால், தேங்காய் எண்ணெய், தேங்காய் பால் பவுடர், தேங்காய் க்ரீம், கொப்பரை மற்றும்தேங்காய் வடிவில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், தேங்காய் உள்ளீடு சாராத உற்பத்தித் தொழில்களான செயற்பாட்டு கார்பன், தேங்காய் நார், தும்பு துகள் மற்றும் தேங்காய் மட்டை தொடர்பான தொழில்களுக்கும் சர்வதேச சந்தையில் அதிக தேவை உள்ளது.

தற்போது, சர்வதேச சந்தையில் தேங்காய் தொடர்பான பொருட்களுக்கு மிக அதிக தேவை உள்ளதுடன், மேலும் ஏற்றுமதியின் அளவு மற்றும் தரமான வளர்ச்சியை பேணுவதற்கும், அதனூடாக சர்வதேச அளவில் இலங்கையின்தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்கான அதிக தேவையை மேம்படுத்துவதற்கும்,தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையானது உற்பத்திச் செயற்பாட்டிற்கான நிதிப் பங்களிப்பு, ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆகிய பணிகளின் போது உயர் மட்டத்திலான கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுதலானது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா.பில்லியன் 122 (அ.டொ.மில்லியன் 661) ஆன ஏற்றுமதி வருமானத்தை விஞ்சி 2021 ஆம் ஆண்டில் ரூபா. பில்லியன் 166 (அ.டொ.மில்லியன் 834) ஆன ஏற்றுமதி வருமானத்தைக் கொண்டு வருவதற்கு முடிந்த்துடன், அது 36% ஆன பதிவிடப்பட்ட வளர்ச்சியாகும். உலகளாவிய கோவிட்

நிலைமைக்கு மத்தியிலும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு அந்நியச் செலாவணி தேவைப்படுகின்ற ஒரு சந்தர்ப்பத்தில் இத்தகைய முன்னேற்றம் அடைந்துக்கொள்வதற்கு எமது பதவியணியின் அனைவரது அர்ப்பணிப்பையும் மெச்சுதல் வேண்டும்.

இலங்கை வாழ் மக்களிடையே தயாரிக்கப்பட்ட, தேங்காய் உற்பத்திகளை பிரபல்யப்படுத்தியதன் மூலம், மனை சார்ந்த தேங்காய் வீண்விரயமாதலை குறைத்து, தேங்காய் உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தலில் பங்கேற்பதற்கும், தெங்கு உள்ளீடு சாராத கைத்தொழில்களை சரியானதும் வினைத்திறனுடன் கூடியதுமான முறைமை ஊடாக சேகரிக்கப்பட்டு சுற்றாடல் நேயத்துடனான முறைகளின் மூலம் குறித்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் தற்போது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இலங்கை வாழ் மக்கள் பொருட்டு தூய மற்றும் தரமான தேங்காய் எண்ணெயை அடையாளம் காண்பதற்காக லேபளில் அச்சிடப்பட்ட 5 நட்சத்திரங்கள் அடங்கிய தரச் சான்றிதழை அறிமுகம் செய்தல், தரமான உற்பத்தி செயல்முறைக்கு தரமான இயந்திரங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்தல், தயாரிப்பு பரிசோதனை மற்றும் தரத்தை வழங்குவதற்கான ஆய்வக சேவைகளை வழங்குதல். சான்றிதழ்கள், தரமான பொருட்களை ஊக்குவித்தல், அரச வங்கிகளுடன் இணைத்து உற்பத்தி செயல்முறைக்கான கடன் வசதிகளை வழங்குதல் உள்ளிட்ட தென்னை கைத்தொழிலின் மேம்பாட்டிற்காக பாரிய பணியை முன்னெடுத்து இலங்கையின் தென்னை கைத்தொழிலை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துவதே எமது நோக்கமாகும்.



கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க
தலைவர்

பொது இயக்குனர் ஆய்வு

இலங்கையில் தெங்கு அபிவிருத்தி சட்டம் மூலம், தெங்கு சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகளின் மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான அதிகாரம் கொண்ட விசேட நிறுவனமாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை செயற்படுவதால், தெங்கு சார்ந்த உற்பத்தி கைத்தொழில் துறைக்கு பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இலங்கையின் தேங்காய் சார்ந்த உற்பத்திகள், உலக சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவதற்கு காரணம் யாதெனில், உள்ளூர்தேங்காயின் சுவை மற்றும் தேங்காய்சிரட்டை மற்றும்மட்டை என்பவற்றின் தனித்துவமும் ஆகும்.

தெங்கு சார்ந்தகைத்தொழில் நிறுவனங்களை பதிவு செய்தல், குறித்த கைத்தொழில்களின் பொருட்டு தொழில்நுட்ப அறிவை வழங்குதல், முதலீட்டு உதவிகள் மற்றும் சர்வதேச ஏற்றுமதி சந்தையிடம் அணுகல்ஆகியவற்றுக்குதொடர்ச்சியானவழிகாட்டல்களைவழங்கியுள்ளது.

இந்த ஆண்டிலும் நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்று நோய் நிலைமை மத்தியிலும்,தெங்கு சார்ந்த உற்பத்தி துறை மூலம் நாட்டிற்குவிசேடபங்களிப்பைச்செய்துபெருமளவிலானஅந்நியச்செலாவணியைப்ஈட்டுவதற்கும், அதன்மூலம் உள்நாட்டு வேலைவாய்ப்பு சந்தையில் நிலையான தன்மையை ஏற்படுத்துவதற்கும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு முடிந்ததைநான்பாக்கியமாகக்கருதுகின்றேன்.

தெங்குஅபிவிருத்திஅதிகாரசபையினால்வழங்கப்படும்ஆய்வகபரிசோதனைஅறிக்கைகள்காரணமாகஅரசஅங்கீகாரம்பெற்றஉற்பத்திகளைசர்வதேசசந்தைக்குவழங்கமுடிந்ததன்மூலம்,சர்வதேசசந்தையைவெல்வதற்கானசந்தர்ப்பம்கிடைத்துள்ளது. உலர்த்தப்பட்டதேங்காய்கைத்தொழில்துறை நாளாந்தம்பரிசோதனைக்குஉட்படுத்தப்பட்டுவரும்நிலையில், தேங்காய் எண்ணெய் கைத்தொழிலைஒழுங்குபடுத்துவதில்எதிர்கால திட்டங்கள் மீது விசேடகவனம்செலுத்தப்பட்டுவருகின்றது.

தேங்குஅபிவிருத்திஅதிகாரசபையானதுகளமட்டத்தில்உள்ளமட்டுப்படுத்தப்பட்டமனிதவளத்தைப் பயன்படுத்திஉள்ளூர்தேங்காய்எண்ணெய்தொழிற்துறையின்தரத்தைமேம்படுத்துவதற்குசெயற்பட்டுவருகின்றது.இதற்காகதரம், ஆரோக்கியம்மற்றும்பாதுகாப்புஎனஐந்துநட்சத்திர(FiveStar) மதிப்பெண்வழங்கும்திட்டத்திற்கு,


தேங்காய்எண்ணெய்நுகர்வுகுறித்துமக்களுக்குவிழிப்புணர்வுஏற்படுத்தவும்எதிர்காலதிட்டங்கள்தயாரிக்கப்படுகின்றன.

ஏற்றுமதித்தொழில்மற்றும்வாழ்வாதாரமேம்பாட்டுத்தொழிலாகதெங்கு சார்ந்த உற்பத்தகைளை மேம்படுத்துவதற்கு சிறப்புகவனம்செலுத்தல் மற்றும் இந்த ஆண்டு செயல்திட்டத்தில்பெரும்முன்னேற்றத்தைஅடைந்துக்கொள்வதற்கு இயன்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.



சுமுது பி விதானகே
பொது இயக்குனர்

2021.12.31 ஆம் திகதியன்று ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



குறுகிய உள்ளீடுகள் :

1. சிரே. முகா. – சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம்
2. உ/பி பணிப்பாளர் – உதவி / பிரதிப் பணிப்பாளர்
3. மு. ம. – முகாமைத்துவ மட்டம்
4. உ. க. உ. – உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்
5. நி. உ. – நிர்வாக உத்தியோகத்தர்
6. பொ. அ. உத். – பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
7. செ. அ. உ. – செயற்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்
8. த. நி. உத்தி. – தர நிர்வாக உத்தியோகத்தர்
9. க. மு. ம. – கனிஷ்ட முகாமத்துவ மட்டம்
10. வி. அ. ம. ஆரா. – விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி
11. த. நி. ம. த. பா - தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்பு

உள்ளடக்கம்

அத்தியாயங்களின் இலக்கம்

செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு 01

தர நிர்வாகம் மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவு 02

விற்பனை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு 03

நிருவாகப் பிரிவு 04

நிதிப் பிரிவு 05

தணிக்கை பிரிவு 06

தணிக்கை அறிக்கை 07

01.செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு

தெங்கு அபிவிருத்தி சட்டத்தில் 20 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள வகையில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கங்கள், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அதில் தெங்கு சார்ந்த கைத்தொழிலின் உற்பத்தி செயற்பாடு, தொழில்நுட்ப செயற்பாடு, தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை உள்நாட்டிலும் ஏற்றுமதி சந்தைக்கும் அனுப்பி வைத்தல் தொடர்பான மேற்பார்வை நடவடிக்கைகளையும் கைத்தொழில் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளையும் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்கீழ் கடந்த ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டில் பிரதானமாக பின்வரும் நோக்கங்களை எய்துக்கொள்வதற்காக செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவு திட்டங்களைத் தயாரித்துள்ளது.

1. தெங்கு சார்ந்த உற்பத்திகளை உற்பத்தி செய்தல் மற்றும் உற்பத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், ஒழுங்குறுத்தல் மூலம் உள்நாட்டு மற்றும் சர்வதேச தரநியமங்களுக்கு பொருத்தமானவாறாக தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதிக்காக முன்னிலைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்குதல்.

2. உலர்த்தப்பட்ட தெங்கு கைத்தொழிலின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அதாவது, நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ஆலை நிதியம்ஊடாக பங்களிப்பு வழங்குதல்

3. இலங்கையில் உற்பத்தி செய்கின்ற மற்றும் இலங்கையில் ஏற்றமதி செய்கின்ற தெங்கு சார்ந்த உற்பத்திகளில் தரம் தொடர்பாக நியமங்களை விதித்தல் மற்றும் அவற்றைப் பராமரித்தல்.

4. பெறுமதி அதிகரிக்கப்பட்ட தெங்கு உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்காக தொழிலநுட்ப மற்றும் நிதிசார் ஒத்துழைப்பு வழங்குதல்.

5. தெங்கு சார்ந்த உற்பத்திகளின் பொருட்டு செயற்பாட்டு மற்றும் மூலதன வசதிகளை வழங்குவதன் மூலம் உற்பத்தியின் திறன் மற்றும் விளைவுத்திறன் என்பன அதிகரித்தல் மற்றும் அலகொன்றிற்கான செலவினைக் குறைத்தல்.

6. தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்கு தேவையான வங்கி கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல் மற்றும் வட்டி சலுகை வழங்குதல்.

7. தெங்கு சார்ந்த உற்பத்திகளில் புதிய முன்னேற்றங்கள், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சிகளுக்காக தூண்டல்களை ஏற்படுத்தல் மற்றும் திறன் மேம்பாட்டிற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பங்களுக்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அலுவலர்களைப் பயிற்றுவித்தல்.

8. முறையற்ற கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குதல்.

9. கிராமிய பொருளாதாரம் மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டம் நடை முறைப்படுத்தல்.

இந்த திட்டமிடல்களிலிருந்து தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் செயற்பணி மற்றும் நோக்கம் என்பன அடிப்படையாகக்கொண்டும் நிலைபேறான அபிவிருத்தியினை இலக்காகக்கொண்டும் உற்பத்திகளின் பண்பு சார் தன்மையினை அதிகரித்தல் மட்டுமின்றி இலக்கு வைக்கப்பட்ட ஏற்றுமதி வருமானங்களை அதிகரித்துக் கொள்வதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கேற்ப 2021 ஆம் ஆண்டில் மேற் குறிப்பிடப்பட்ட திட்டங்ளை நடைமுறைப்படுத்துவதற்காக செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவினால் நடைமுறைப்படுத்திய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. அடிப்படையில் தெங்கு சார்ந்த கைத்தொழில்கள், உற்பத்தியாளராக பதிவு செய்தல் மற்றும் அதன்மூலம் நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்மைவாக கைத்தொழிலில் பராமரிப்பை ஒழுங்குபடுத்திச் செல்லல்.

2. உரிய தரங்களை பராமரிப்பதற்கு பொறுப்பாக இருக்கும் பொருட்டு செயற்பாட்டு அலகுகள் மற்றும் மாதிரிப்படுத்தலை பரிசோதனை செய்தல், ஏற்றுமதி இருப்புகளில் பெற்றுக்கொண்ட தெங்கு உற்பத்தி மாதிரிகளை பரிசோதனை செய்தல், ஏற்றுமதி பொருட்களின் இருப்புகளுக்கு தரச் சான்றிதழ்களை வழங்குதல், அதன்மூலம் இலங்கை நியமங்களுக்கமைவாக உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு கைத்தொழிலார்களை ஈடுபடுத்தல். அதற்காக ஏற்புடையவாறு ஆலோசனைகளை வழங்குதல்.

3. நுண்ணுயிரியல் மற்றும் பௌதீக தரச் சான்றிதழ்களை வழங்குவதன் ஊடாக தெங்கு சார்ந்த உற்பத்திகளில் நிமங்களை பராமரிப்பதற்காக கைத்தொழிலார்களை ஈடுபடுத்தல் மற்றும் ஏற்றுமதிக்கான தடைநீக்க நடைவடிக்கைகளின் பொருட்டு நேரடி பங்களிப்பு வழங்குதல்.

4. தெங்கு உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களின் பொருட்டு ISO 22000 உணவு பாதுகாப்பு தொடர்பான தரச் சான்றிதழ் முறைமை மற்றும் தெங்கு உள்ளீடு சாராத கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்தி தயாரிப்புகளுக்கான (GMP) தரமுறைமைகள் ஆகிய சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் முறைமைகளில் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்குவதன்ஊடாக, உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுப் பொருட்களின் பண்புசார் தன்மையினை மேம்படுத்தல். அத்துடன் குறித்த உற்பத்திகளின் பொருட்டு சர்வதேச அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்குப் பங்களிப்பு வழங்குதல்.

5. தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக கைத்தொழிலார்ளை ஈடுபடுத்தல், பங்களிப்பு வழங்குதல் மற்றும் தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் நுகர்வு தொடர்பில் பாவனையாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்ளை நடைமுறைப்படுத்தல்.

6. உலர்த்திய தெங்கு கைத்தொழிலில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அதாவது, நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தல், உட்கட்மைப்பு வசதிகளின் அபிவிருத்தி பொருட்டு ஆலை அபிவிருத்தி நிதியம் ஊடாக பங்களிப்பு வழங்குதல்.

7. தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்காக மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி என்பவற்றுடன் இணைந்து சலுகை வட்டிக் கடன் திட்டம் அமுல்படுத்தல் மற்றும் வட்டி தள்ளுபடிகள் வழங்குவதன்ஊடாக கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல்.

8. தேங்காய் தும்பு நார் உற்பத்திக்காக அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு முதலீட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

9 செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவின் அலுவலர்களதும் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப அலுவலர்களதும் வினைத்திறன் மற்றும் பயனுள்ளதான சேவைகளை வழங்குவதற்காக திறன்களை அபிவிருத்தி செய்தல்.

10. செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவின் ஆராய்ச்சி பிரிவிடம் பரிசோதனைக்கான ISO 17020:2012 அங்கீகாரச் சான்றிதலினைப் பெற்றுக் கொள்வதற்கு பணியாற்றுதல்.

11. உற்பத்தி செயன்முறைகளைச் செல்லுபடியாக்குவதற்காக மத்தியஸ்தகராக செயற்படல்.

12. முறையற்ற கைத்தொழில்களின் பொருட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

13. சுற்றாடல் நேயத்துடனான தேங்காய் சிரட்டை எரி அடுப்புகள் நிருமாணிப்-பதற்காக முறைசாரா துறையில் கைத்தொழிலாளர்களிடம் முதலீட்டு உதவிளை வழங்குதல்.

14. முறைசாரா கைத்தொழில் சார்ந்து தயாரிப்பு அலகுகளைத் தாபித்தல்.

1. தெங்கு சார்ந்த கைத்தொழில்கள், உற்பத்தியாளராக பதிவு செய்தல் மற்றும் அதன்மூலம் நடைமுறையில் உள்ள சட்டங்கள் ஒழுங்குவிதிகள் பிரகாரம் கைத்தொழிலைப் பேணுவதற்கு ஈடுபடுத்துதல்.

2021 ஆம் ஆண்டில் தெங்கு சார்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை பதிவு செய்தலானது, 2020 நவம்பர் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய பதிவு விண்ணப்பங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாட்டு அபிவிருத்திப் பிரிவு, குருணாகல், கம்பஹா, புத்தளம், காலி, போன்ற பிரதேச அலுவலகங்களின் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டது. மேலும் உரிய பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளம் ஊடாக பெற்றுக்கொள்வதற்கும், இணையத் தளத்துடன் நேரடியாக (on line) பதிவினை விண்ணப்பம் செய்வதற்கும் கைத்தொழிலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் தெங்கு முக்கோணம் சார்ந்தும் நடமாடும் பதிவு சேவைகள் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

		2019	2020	2021
1	உலர்த்தப்பட்ட தெங்கு	48	46	44
2	தேங்காய் கிறீம்	17	14	18
3	மாவாக்கப்பட்ட தேங்காய்ப் பால்	12	13	13
4	கொப்பறா தேங்காய் எண்ணெய்	89	101	133
5	புதிய தேங்காய் எண்ணெய்	60	50	49
6	வெள்ளைத் தேங்காய் எண்ணெய்	38	39	60
7	MCT எண்ணெய்	-	1	2
8	MCT பவுடர்	-	2	2
9	கைத்தொழில் தேங்காய் எண்ணெய்	7	9	5
10	தேங்காய் தண்ணீர்	22	23	24
11	தேங்காய் வினாகிரி	1	1	1
12	செப்பனிடப்படாத தேங்காய் எண்ணெய்	34	35	47
13	தேங்காய்ப்பால்	22	24	26
14	மாவாக்கப்பட்டதேங்காய்ப்பால்	6	6	6
15	தேங்காய்ப் பால் சார்ந்த உற்பத்திகள்	5	5	6
16	தேங்காய் வெண்ணெய்	7	8	8
17	தேங்காய் சீனி	4	1	8
18	சுத்திகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய்	7	8	10
19	தேங்காய் கள்ளு	-	-	1
20	மென்மையான ஜெல்	1	1	1
21	கொப்பறா	26	26	27
22	தேங்காய் பரப்பல்	3	5	5
23	உலர்த்தப்பட்டதேங்காய் மீள பொதியிடல்	1	3	8
24	தேங்காய் சிரப்	3	3	3
25	துருவிய தேங்காய்	1	1	1
26	தேங்காய்ச் பாணி	7	10	11
27	தேங்காய் பால் தயாரிப்பாளர்	2	2	2
28	தேங்காய் எமினோ		3	6
29	தேங்காய் ஜாம்	1	1	1


30	உலர்த்தப்பட்ட தேங்காய் (துண்டுகள்)	-	-	1
31	தேங்காய் தண்ணீர் பவுடர்	-	-	2
32	புதிய தேங்காய் எண்ணெய் பவுடர்	-	-	1
33	புதிய தேங்காய் எண்ணெய் (செப்பனிடப்பட்ட)	-	-	2
34	உலர்த்திய தேங்காய் (துண்டுகள் - செப்பனிடப்பட்ட)	-	-	2
35	தேங்காய் மா	–	5	16
36	தேங்காய் சார்ந்த மதுபானம்	-	-	3
37	தேங்காய் சம்பள்	-	-	1
38	செயலூக்கமிக்க காபர்ன்	7	10	9
39	பெறுமதி சேர்க்கப்பட்ட செயலூக்கமிக்க கார்பன்	-	-	1
40	நார்/நார் ஆலை	267	283	226
41	சிரட்டைக் கரி துண்டுகள்	5	5	6
42	Hub செயற்பாட்டாளர்	1	1	1
43	சிரட்டைக் கரி	33	33	30
44	சிரட்டை துண்டுகள்/பவ்டர்	1	3	6
45	தேங்காய் சிரட்டைச் சார்ந்த அலங்காரப் பொருட்கள்	8	11	11
46	முடிவுப் பொருட்கள்	126	137	125
47	தும்புத்துகள் மூலக் கூறுகள்	120	124	139
48	தும்பு இடைநிலைத் தயாரிப்புகள்	39	37	47
49	ஏனைய	15	2	9
	மொத்தம்	**1046**	**1092**	**1166**

அட்டவணை 1: உற்பத்தியாளர்களின் பதிவு – 2021


தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தி, அதன் மூலம் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக்கொண்டு மேற்கொள்கின்ற உற்பத்திகளுக்கு அதிக ஏற்றுமதி வருவாயை உருவாக்கும் நோக்கத்துடன், வருடாந்த பதிவுக்கான முறைமை சான்றுப்படுத்தலின் தேவை மேலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, பாரம்பரிய தேங்காய் எண்ணெய், கொப்பரா மற்றும் அனைத்து தேங்காய்

உள்ளீடு சார்ந்த உற்பத்திகளுக்காக ISO 22000:2018 உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை சான்றிதழும், அனைத்து தும்புச்சோறு மூலக்கூறுகளுக்கு சிறந்த தயாரிப்பு பயன்பாடுகள் தொடர்பான சான்றிதழும் உள்ள கைத்தொழிலாளர்கள் அதிகாரசபையில் பதிவாகியுள்ளனர்.


கடந்த ஆண்டுகளில் போன்று 2021 ஆம் ஆண்டிலும் தெங்கு கைத்தொழிலின் பதிவில் வளர்ச்சி காணப்படுகிறது. அவற்றுக்கிடையில் தேங்காய் எண்ணெய் கைத்தொழில் சிறப்பான இடத்தைக்கொண்டுள்ளது. அதிலும் வெள்ளைத் தேங்காய் எண்ணெய் குறிப்பிடத்தக்கதாகும். தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் கைத்தொழில்களுக்கு வழங்குகின்ற அனுசரணையும், ஏற்றுமதியை மேம்படுத்தலும் இந்த பதிவுகளின் அதிகரிப்புக்கு காரணங்களாகும். தெங்கு சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதிக்காக அதிகாரசபையில் பதிவாகியுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்திகளை கொள்வனவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், பதிவுகளில் 75% இற்கு அதிகமான அளவு ஆண்டில் ஆரம்ப காலாண்டில் மேறகொள்ளப்படுகிறது.



வரைபடம் 1: தேங்காய் உள்ளீடு சார்ந்த தொழில்களின் விரிவாக்கம்



வரைபடம் 2: தென்னை மட்டை சார்ந்த தொழில்களின் விரிவாக்கம்



வரைபடம் 3: தேங்காய் ஓடு அடிப்படையிலான தொழில்கள் சார்ந்த விரிவாக்கம்

மேற்படி வரைப்படங்ளை ஒப்பிடுகையில் தெங்கு சார்ந்த கைத்தொழில்களில் 75% இற்கும் அதிகமாக தெங்கு முக்கோணப் பிரதேசங்களில் பரவலாகி இருப்பதை காணலாம். அதன்படி, தெங்கு முக்கோணப் பிரதேசங்களுக்கு வெளியில் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அதிக ஆற்றல் இருப்தையும் அவதானிக்கலாம். மேலும் தெங்கு அறுவடையுடன் ஒப்பிடுகையில் தேங்காய் சிரட்டை மற்றும் தேங்காய் மட்டை சார்ந்த கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அதிக ஆற்றல், வடக்கு மற்றும் வட கிழக்கு சார்ந்து காணப்படுவதையும் அவதானிக்கலாம்.

2. **உரிய நியமங்ளை பராமரிப்பதற்கு பொறுப்பாக இருக்கும் பொருட்டு செயற்பாட்டு அலகுகள் மற்றும் மாதிரிப்படுத்தலை பரிசோதனை செய்தல், ஏற்றுமதி இருப்புகளில் பெற்றுக்கொண்ட தெங்கு உற்பத்திகளின் மாதிரிகளை பரிசோதனை செய்தல், ஏற்றுமதி பொருட் இருப்புகளுக்கு தரச் சான்றிதழ்களை வழங்குதல், அதன்மூலம் இலங்கை தரநியமங்களுக்கமைவாக உற்பத்திகளை தயாரிப்பதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தல், அதற்கு தேவையான வகையில் ஆலோனைகளை வழங்குதல்.**

2.1 தும்புநார் மற்றும் தும்புத்கள் மூலக் கூறுகளின் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

தும்புநார் உற்பத்தியாளரகைளைத் தமது நிறுவனத்தின் உற்பத்திகளான தும்புநார் மற்றும் தும்புத்கள்களின் தரம் தொடர்பாக அறிவுறுத்துவதற்கும், விவரக் குறிப்புகளால் விலகல்களை அவதானித்து உற்பத்தி செயன்முறையினை வடிவமைப்பதற்கும் தும்புநார் மற்றும் தும்புத்கள் மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல் நோக்கமாகும்.

இதன் போது தும்புத்துகள் மூலக்கூறுகளின் மாதிரிகளில் PH பெறுமதி, ஈரப்பதம் (Moisture), மின்கடத்தல் தன்மை (Electrical Conductivity) வெளியக கழிவுகள் (Extraneous matter) ஈகோலி (Ecoli) செல்மனல்லா (salmonella) ஆகிய பண்பளவுகளும் , தும்பு மாதிரிகளில் ஈரலிப்பு மற்றும் (Moisture) கழிவுபொருட்கள் (Impurities) ஆகிய பண்பளவுகளும் ஆய்வு செய்யப்பட்டன.

அதன்படி, கடந்த ஆண்டுகளில் போன்று 2021 ஆம் ஆண்டுக்காக அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட தும்புச்சோறு மூலக்கூறுகள் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து 187 உற்பத்திகளின் மாதிரிகளைத் திரட்டி, தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன . மேலும் தெரிவு செய்யப்பட்ட தும்புநார் உற்பத்திகள்/ நிறுவனங்கள் 134 இல்

மாதிரிகளைத் திரட்டி தரச் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தந்த நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்ட இலங்கை விவரக்குறிப்புகளின் விலகல் சந்தர்ப்பங்களை ஆய்வு செய்து செவ்வையாக்குவதற்கு கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டது. இதன்மூலம் மிக தரத்துடன் கூடிய உற்பத்திகளை சந்தைக்கு வழங்குதல் அதிகாரசபையின் குறிக்கோளாகும்.

2.2 புதிய தேங்காய் எண்ணெய் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

புதிய தேங்காய் எண்ணெய் மாதிரிகள்அதிகார ,சபையின் ஆய்வுகூடம்மூலம் இலவச கொழுப்பு அமிலங்கள்)Free fatty acids), நிறம் (Colour) ஈரப்பதம் , (Moisture) , அயடின் மதிப்பு (Iodine value) மற்றும் ஈஸ்ட் மற்றும் பூஞ்ஞனம்)Yeast & Moulds (ஆகிய பண்பளவுருக்களின் கீழ் பகுப்பாய்வுகள் மேறகொள்ளப்பட்டன .

2021 ஆம் ஆண்டில் 57 புதிய தேங்காய் எண்ணெய் மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அந்தந்த நிறுவனங்களில் பரிசோதனை செய்யப்பட்ட இலங்கை விவரக்குறிப்புகளின் விலகல் சந்தர்ப்பங்களை கற்கையிட்டு செவ்வையாக்குவதற்காக கைத்தொழிலாளர்ளை ஈடுபடுத்தப்பட்டது. இதன்மூலம் மிக தரத்துடன் கூடிய உற்பத்திகளை சந்தைக்கு வழங்குதல் அதிகாரசபையின் குறிக்கோளாகும்.

பகுப்பாய்வு அறிக்கைகள் பிரகாரம் உற்பத்திகளின் தரமானது, புதிய தேங்காய் எண்ணெய்காக இலங்கை தரநியம நிறுவனத்தின் ஒப்பீடுகளுடன் பொருந்தாத சந்தர்ப்பங்களில், குறித்த தரவுகளின் செவ்வைத்தன்மைக்காக நடவடிக்கை எடுத்தல் இந்த பகுப்பாய்வு செயற்பாட்டின் முக்கியமான குறிக்கோளாகும்.

2.3 தேங்காய் பால் உற்பத்திகளின் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

தயாரிக்கப்பட்ட தேங்காய்ப் பால் மற்றும் மாவாக்கப்பட்ட தேங்காய் பால் ஒழுங்குறுத்தலை நோக்கமாகக்கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்-படுத்தப்பட்டது. இதன்போது தேங்காய் பால் மாதிரிகளில் கொழுப்பு அளவு PH பெறுமதி பரிசோதனை செய்யப்பட்டதுடன் மாவாக்கப்பட்ட தேங்காய் பால் மாதிரிகளில் செல்மொனெல்லா (salmonella) , ஈகோலி (Ecoli) PH பெறுமதி,கொழுப்பு அளவு பரிசோதன செய்யப்பட்டது. தொழிற்சாலை நிறுவனங்களில் தேங்காய் பால் மாதிரிகள் மற்றும் 150 மாவாக்கப்பட்ட தேங்காய் பால் மாதிரிகளைப் பரிசோதனை செய்து ஆய்வு அறிக்கைகள் பெற்றுக்கொண்டு கைத்தொழிலாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

2.4 தேங்காய் எண்ணெய் மாதிரி பகுப்பாய்வு செயற்பாடு

செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவு மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பண்புசார் தரத்துன்கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக இலட்சினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தேங்காய் எண்ணெய் கைத்தொழிற்சலை நிறுவனங்களிலிருந்து 173 தேங்காய் எண்ணெய் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டும், அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டும், இலங்கை தரநியம நிறுவனத்தில் SLS 32: 2017 இற்கு அமைவாக தேங்காய் எண்ணெயின் அயடின் பெறுமதியும், இலவச கொழுப்பு அமில அளவும், அஃலடோக்சின் பெறுமதியும் மாதிரி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டது.

அந்தந்த நிறுவனங்களில் பரிசோதனை செய்யப்பட்ட இலங்கை விவரக்குறிப்புகளின் விலகல் சந்தர்ப்பங்களை ஆய்வு செய்து செவ்வையாக்கி கொள்வதற்காக கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டதுடன், பகுப்பாய்வு தகவல்ளை அடிப்படையாகக் கொண்டு ஏற்புடைய நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2.5 தேங்காய் சிரட்டைக் கரி பகுப்பாய்வு செயற்பாடு

இலங்கையில் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்பு வழங்கும் தேங்காய் உற்பத்திகளுடன் தொடர்புடைய பிரதான துறையாக அடையாளம் காணப்படும், செயலூக்கமிக்க சிரட்டைக் கரி உற்பத்தியில் அடிப்படை மூலப்பொருளான சிரட்டைக் கரி பகுப்பாய்வு 2021 ஆம் ஆண்டிலும் ஆரம்பிக்கப்பட்டது. இதன்பொது ஈரப்பதம், சாம்பள் அளவு மற்றும் வெளியக கழிவு பொருட்களின் அளவுருக்கள் தொடர்பாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. 13 உற்பத்தி நிறுவனங்களில் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டு பகுப்பாய்வு நடவடிக்கைகளின் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தந்த நிறுவனங்களில் பரிசோதனை செய்யப்பட்ட இலங்கை விவரக்குறிப்புகளின் விலகல் சந்தர்ப்பங்களை கற்கையிட்டு சரிசெய்து கொள்வதற்காக கைத்தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டது.

3. **நுண்ணியல் மற்றும் பௌதீக தரச் சான்றிதழ்களை வழங்குவதன் ஊடாக தெங்கு சார்ந்த உற்பத்திகளில் தரங்களை பராமரிப்பதற்கு தொழிலாளர்களை ஈடுபடுத்துதல் மற்றும் ஏற்றுமதி தடைநீக்க நடவடிக்கைகளின் பொருட்டு நேரடி பங்களிப்பு வழங்குதல்.**

செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் சேவைகளை கூட்டிணைக்கும் பிரிவு மூலம் வழங்கப்படும் மேற்படி சேவைஊடாக ஏற்றுமதியாளர்களிடம் தமது உற்பத்தி-களை ஏற்றுமதி செய்கையில், தடைநீக்க நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு இந்த சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இந்த தரச் சான்றிதழ் வழங்கும் போது உற்பத்திகளில் பகுப்பாய்வு தரநியமங்களுடன் நேரடியாக தொடர்புபடுவதால் தரத்தில் உயர்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு அவர்களை தூண்டுவிக்கப்படும்.

2021 ஆம் ஆண்டில் உலர்த்திய தேங்காய் 33,289 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்துள்ளதுடன், அதில் நுண்ணியல் மற்றும் பௌதீக அளவுருக்களின் பகுப்பாய்வுக்காக 7749 நாளாந்த உலர்த்திய மாதிரிகள் செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவிடம் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு 572 ஏற்றுமதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

சான்றிதழ்களின் வகைகள்	**வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை**	
	2020	**2021**
செல்மொனெல்லா அற்றவைகள்	197	228
பௌதீக தரப்பகுப்பாய்வு	197	228
அஃலடோக்சின் அற்றவைகள்	83	170
சல்பர் டயொக்சைட் அற்றவைகள்	95	130
மொத்த எண்ணிக்கை	**572**	**756**

அட்டவணை 2 ; உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிக்காக நுண்ணுயிரியல் மற்றும் பௌதீக தரப் பகுப்பாய்வு சான்றிதழ்களை வழங்குதல்.

2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஏற்றுமதி சான்றிதழ்களின் எண்ணிக்கையானது, முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் 32 %ஆன அதிகரிப்பு காணப்பட்டது. வீழ்ச்சியடைந்த ஏற்றுமதி பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்பு இதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களினால் தேவைக்கேற்ப கொண்டு வந்து கையளிக்கப்படும் தெங்கு சார்ந்த உற்பத்தி மாதிரிகளைப் பகுப்பாய்வுப் பணிகளுக்காக இரசாயண ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, பெறப்பட்ட பெறுபேறு ஆவணங்களுக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு பகுப்பாய்வு அறிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

உற்பத்தி வகை	வெளியிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை		
	2021	2020	2019
தும்பு/தும்புத் துகள்	437	250	316
தேங்காய் எண்ணெய்	411	319	211
உலர்த்திய தேங்காய்	11	08	18
கொழுப்பு ஓரளவு நீக்கப்பட்ட உலர்த்திய தேங்காய்	14	51	87
தேங்காய்ப் பால்	-	03	9
புண்ணாக்கு	14	03	-
தேங்காய் க்ரீம்	03	02	-
இளநீர்	06	-	-
தேங்காய் தன்னீர்	04	-	-
சிரட்டைக் கரி	02	-	-
தேங்காய்	01	-	-
	903	636	641

அட்டவணை 3-மைவாக கிடைக்கப்பெறும் மாதிரிகளின் பொருட்டு அறிக்கைகளை வழங்குதல்.

2021 ஆம் ஆண்டில் பரிசோதனை செய்யப்பட்ட உற்பத்திகளின் அளவும், உற்பத்திகளின் வகையும் அதிகரித்துள்ளது. அதன்படி உலகளாவிய மக்கள், உற்பத்தியின் தரத்தினை தொடர்ந்தும் கண்காணிக்கின்றார்கள் என்று முடிவு செய்யலாம். மேலும் பயிர்ச் செய்யும் ஊடகமாக உலகளாவிய வகையில் தும்புசோறு பரிசேதனைக்குட்படுத்தல் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது.

4. **தேங்காய் உள்ளீடு சார்ந்த கைத்தொழில்களின் பொருட்டு ISO 22000:2018 உணவு பாதுகாப்பு தொடர்பான தரச் சான்றிதழ் முறைமை மற்றும் தேங்காய் உள்ளீடு சாராத கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்தி செயற்பாட்டிற்கான) GMP) சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் முறைமையில் கணக்காய்விற்கு ஒத்துழைப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுறுத்திய உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல். மேலும் குறித்த உற்பத்திகளின் பொருட்டு சர்வதேச அங்கீகரிப்பை பெற்றுக்கொள்வதற்கு பங்களிப்பு வழங்குதல்.**

ISO 22000:2018 என்பது உணவாக நுகர்விற்கு பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்துகின்ற தரச் சான்றுப்படுத்தல் முறைமையாகும் தேங்காய் . எண்ணெய், கொப்பறா தவிர்ந்த தேங்காய் உள்ளீடு மற்றும் தேங்காய் தண்ணீர் சார்ந்து தயாரிக்கப்படும் உணவு உற்பத்திகளின் பொருட்டு இந்த தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதுசர்வதேச தர நியமங்களுடன் .- கூடிய வினைத்திறனான பேண்தகு முறைமை தாபிப்பதன் ஊடாக ,உயர் தரத்திலான உற்பத்தியினை உருவாக்குதல் இதன் அடிப்படை நோக்கமாகும் . இதன்மூலம் பண்புசார் மற்றும் தரநியமத்துடன்கூடிய உற்பத்திகளை சந்தைக்கு வழங்கப்படுவதுடன்அதனூடாக கைத்தொழிலாளர்களுக்கு சந்தையினுள் விசேட , .இடத்தினை கட்டியெழுப்புவதற்கு முடியுமாகும்

இதன்போது SLAB (இலங்கை அங்கீகரித்தல் நிறுவனம்) மற்றும்/அல்லது IAF (International Accreditation Forum) ஆகிய நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்திய நிறுவனங்கள் கணக்காய்வு நடவடிக்கைகளை பேணுகையில் அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்தி, கணக்காய்வு பொருட்டு பயிற்சிப்பெற்ற

கள அலுவலரை அதற்காக ஈடுபடுத்தப்படுவதுடன், அந்த அலுவலரால் வழங்கப்படும் அவதானிப்பு அறிக்கைபடி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் உள்ள குறைபாடுகளை செவ்வையாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டு இறுதியில் 39 கைத்தொழில்கள் **ISO 22000:2018** கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

GMP என்பது சிறந்த உற்பத்தி செயற்பாட்டினை பராமரிக்கப்படுவதாக உறுதிப்படுத்துகின்ற தர முறைமையாகும்இந்த தரச் சான்றிதழ் தும்பு சார்ந்த . உற்பத்திகள் மற்றும் த ம்புச்சோறு உற்பத்திகளை பதிவு செய்கையில் கட்டாயப்படுத்தப்பட்டதுஇந்த தரச் சான்றிதழ் .களை பெற்றுக்கொள்ளும் முறைமைகளில், கணக்காய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பங்களிப்பு வழங்குவதன்ஊடாக உற்பத்தி செயற்பாடு மற்றும் முடிவுறுத்தப்பட்ட உற்பத்திகளில் தரத்தினை உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்காக செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவு ஒத்துழைப்பு வழங்குகின்றது .2021 ஆம் ஆண்டு இறுதியல் 61 கைத்தொழில்கள் GMP கணக்காய்வு பரிசோதனைகளில் பங்களிப்புச் செய்தன.

2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக உரிய சான்றுப்படுத்தல் நிறுவனங்களில் கணக்காய்வு நடவடிக்கைளில் பின்னடைவு ஏற்பட்டது.

5. தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக கைத்தொழிலாளர்ளை ஈடுபடுத்தல், பங்களிப்பு வழங்குதல் மற்றும் தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் நுகர்வு தொடர்பில் பாவனையாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்ளை நடைமுறைப்படுத்தல்.

2020 தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் புள்ளிவிபரங்களின்படி, 2792.2 ஆன இலங்கையின் வருடாந்த தெங்கு உற்பத்தியில் 65.4% ஐ உள்நாட்டு நுகர்விற்கும், 34.6% கைத்தொழில்களுக்கும் செலவிடப்பட்டுள்ளது. அதன்படி, தெங்கு சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியில் கிடைக்கப்பெறும் வருமானம் அ.டொ. பில்லியன் வரை அதிகரிப்பதற்கு என்றால் உள்நாட்டு தெங்கு நுகர்வை முறைசார்படுத்தல் அத்தியாவசிய விடயமாகும்.

அதேபோன்று கிராமிய வகையில் மேற்கொள்ளப்படும் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக உரிய தொழில்நுட்ப முறைமைகளை பயன்படுத்தாமையால், பயன்படுத்த முடியுமான தேங்காய் அளவு விரயமாதலும், அவ்வாறு உற்பத்தி செய்கின்ற தேங்காய் எண்ணெய் பொருத்தமற்ற வகையில் உற்பத்தி செய்தலும் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

மேலும், உள்நாட்டு ரீதியாக தேங்காய் எண்ணெய் பொருட்டான வேண்டுகோளுக்கு ஏற்ற வகையிலான உற்பத்தி நாட்டில் இல்லாமையால், தரமற்ற, பவைனைக்கு பொருத்தமல்லாத தேங்காய் எண்ணெய் போன்று வேறு பதிலீட்டு எண்ணெய்களுடன் கலந்து தேங்காய் எண்ணெயாக விற்பனை செய்வதால், தேங்காய் எண்ணெய் தொடர்பில் பாவனையாளர்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைவதற்கு காரணமாகியுள்ளது.

இதற்கு மேலதிகமாக அண்மைக் காலமாக இறக்குமதி செய்கின்ற தேங்காய் எண்ணெயில் எப்லடொக்ஸின் நச்சு இரசாயனம் உள்ளடங்குவதாக உறுதிப்படுத்த-ப்பட்டுள்ளதாலும், இவ்வாறான நச்சுத்தன்மையுடன் கூடிய தரமற்ற உணவு உட்கொள்வதால் பல்வகையான தோற்றாத நோய்கள் அதிகரிப்பதற்கு காரணியாகி-ன்றதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும் தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பாக சமூகத்தில் ஒரு கலந்துரையாடல் உருவாகியுள்ளது.

இலங்கையின் கிராமப்புறங்களில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் முக்கிய ஆதாரமாக கொப்பறை உள்ளது. கிராமப்புறங்களில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கொப்பறை தேங்காய் சிரட்டைகளை எரித்து பதப்படுத்தப்படுவதால், இவ்வாறு பதப்படுத்தப்படும் பெரும்பாலான கொப்பறையானது பூஞ்சை மற்றும் அழுகிய கொப்பறையாக மாறுகிறது. மேலும் அவ்வாறு பூஞ்ஞனம் ஏற்பட்ட கொப்பறையில் அஃலடொக்ஸின் போன்ற நச்சு இரசாயனங்களும், சிரட்டை எரிக்கும்போது வெளியாகின்ற புகையிலிருந்து ஹைட்ரோகார்பன்கள் போன்ற நச்சுகளும் வெளியேறுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்படும் கொப்பறையிலிருந்து உற்பத்தி செய்கின்ற தேங்காய் எண்ணெய்யும் தரமற்றதாகவும், நச்சுத்தன்மை வாய்ந்ததாகவும் இருப்பதால், கிராமப்புற தேங்காய் எண்ணெய் தொழிலை மேம்படுத்துவது முக்கியமான தேவையாகும்.

அதன்படி, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைக்கமைவாக தரப்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, கிராமிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியின் குறைபாடுகளை கண்டறிந்து, அவற்றை புதிய தொழில்நுட்பங்கள் ஊடாக மேம்படுத்துவதற்கும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத

எரிசக்தி பாவனையும், எதிர்காலத்தில் புதுப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் உணவு விதிமுறைகளுக்கு இணங்க, பொதியிடப்பட்ட தூய தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்துவதற்கு மக்களை ஊக்குவிப்பதனையும் இலக்காகக்கொண்ட மூலோ-பாய மாதிரி நிகழ்ச்சித்திட்டமாக 2021 ஆம் ஆண்டில் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு உதவி வழங்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கருத்திட்டம் ஊடாக கைத்தொழிலாளர்கள், 2021 ஆம் ஆண்டில் 50 ம், 2022 ஆம் ஆண்டில் 150 ம், 2023 ஆம் ஆண்டில் 250ம், 2024 ஆம் ஆண்டில் 150 ம் என்ற வகையில் 600 என்ற இலக்கினைப் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்படினும், 2021 ஆம் ஆண்டில் செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவின் வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து தெங்கு கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா.மில்லியன் 21.5 ஆவதால் பயனுகரிகளின் எண்ணிக்கை 34 இற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

கருத்திட்டம் ஊடா, 2021 ஆம் ஆண்டில் 50 ம், 2022 ஆம் ஆண்டில் 150ம், 2023 ஆம் ஆண்டில் 250ம், 2024 ஆண்டில் 150 ம் என்ற வகையில் 600 கைத்தொழிலார்களை இலக்காகக் பூர்த்தி செய்வதற்கு பிரேரணை செய்யப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் செயற்பாட்டு அபிவிருத்தி பிரிவில் வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து தேங்காய் எண்ணெய் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா. மில்லியன் 21.5 ஆன படியால் பயனுகரிகளின் எண்ணிக்கை 34 இற்கு மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டது.

அதன்படி, பத்திரிக்கை அறிவிப்புகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் கள அலுவலர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டு கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவங்களிலிருந்து உலர்த்தும் இயந்திரங்கள் பொருட்டு 32 கைத்தொழிலாளர்களும், போத்தலில் அடைத்தல், முள் அகற்றல் மற்றும் செப்பனிடப்படாத துண்டுகளை அகற்றுவதற்காக ஒரு கைத்தொழிலாளருக்கும், எண்ணெய் வடிகட்டும் இயந்திரம் மற்றும் தேங்காய் தூய்மைபடுத்துவதற்கான வெள்ளை இரும்பு பாத்திரங்களுக்காக ஒரு கைத்தொழிலாருக்கும் என்ற வகையில் செலவாகும் பணத் தொகையில் 70% என்ற வகையில் ரூபா 06 இலட்சம் என்ற ஆகக் கூடிய தொகை வரை தெங்கு அதிகார சபையினால் வழங்குவதற்கும், எஞ்சிய தொகையை பயனுகரியால் செலவிடலும் வேண்டும் என்ற அடிப்படையில் 34 கைத்தொழிலார்களின் பொருட்டு ரூபா. மில்லியன் 20.36 ஆன முதலீட்டு வசதி வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக இந்த கருத்திட்டத்திற்கு இணையாக 70 கைத்தொழிலாளர்களின் பொருட்டு தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்தி தொடர்பாக 02 நிகழ்ச்சித்திட்டங்கள் லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடாத்தப்பட்டன.

அதன்படி, இந்த பயனாளிகள், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் இரசாயன பகுப்பாய்வு மூலம் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் தரத்தை பராமரிக்கவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தலுக்காக செலவாகும் மின் அலகுகளின் எண்ணிக்கை சூரிய மின் உற்பத்தி மூலம் பெற்றுக்கொள்வதற்கும், பயனாளிகளை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்-கப்படுகிறது.



படம் 1: நிதி வசதிகள் வழங்கப்பகின்ற சில உலர் இயந்திரங்களை ஆய்வு செய்தல்

தரத்துடன்கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு உற்பத்தியாளர்களை ஈடுபடுத்தல் மற்றும் அதன் மூலம் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலை மேம்படுத்தல்.

தரத்துடன் கூடிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு உற்பத்தியாளர்களை ஈடுபடுத்தல் மற்றும் அதன்மூலம் தேங்காய் எண்ணெய் கைத்தொழலை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட, கடைசி பாவனையாளரை நோக்கமாகக்கொண்டு சந்தைக்கு வழங்கப்படும் தேங்காய் எண்ணெயின் உற்பத்தி செயற்பாட்டையும் கவனத்தில்கொண்டு, ஒட்டுமொத்த தரம் தொடர்பாக 5 நட்சத்திரங்களைக்கொண்ட தரச் சான்றிதழுடன் இலட்சினை வழங்கும் கருத்திட்டம் தொடர்ச்சியாக 2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்பட்டது.

தேங்காய் எண்ணெய் ஒட்டுமொத்த தயாரிப்பு செயல்முறை மற்றும் இலவச கொழுப்பு அமிலம், அயடின் பெறுமதி இலங்கை தரநிலை நிறுவனத்தால் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக வழங்கியுள்ள SLS: 32 தரநிலை அளவுருக்களுக்குள் இருத்தலும், அஃப்லடொக்ஸின் இல்லையெனவும், எந்தவொரு இரசாயன சேர்க்கைகள் இல்லாமல் இயற்கையாக உற்பத்தி செய்யப்படுகின்றதெனவும், ஒட்டுமொத்த உற்பத்தி செயற்பாடு தரத்துடன் மேற்கொள்ளப்படுகின்றதெனவும் சான்றுப்படுத்தி, குறித்த அளவுகோள்களை 5 நட்சத்திரங்களால் அடையாளப்படுத்தி, புலமைச் சொத்து பணியகத்தால் பதிவுசெய்யப்பட்டும் 18.09.2020 தேதியிட்ட வர்த்தமானி அறிவிப்பால் பிரசூரிக்கப்பட்டும் 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.



படம் 02- தரப்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய்க்கு இலட்சினை வழங்குதல்

இந்தச் செயல்பாட்டில் நிபுணத்துவக் குழுவை முனைப்பாக பங்களிப்புச்செய்துக் கொள்ளப்பட்டதுடன், சான்றுப்படுத்தல் புள்ளிகள் வழங்கும் இறுதி அனுமதி பெற்றுக்கொள்வதற்கு ஒரு சுயாதீன குழுவாக, இந்த நிபுணத்துவக் குழுவில் பின்வரும் அமைப்புகளின் மூன்று உறுப்பினர்கள், இரண்டு அதிகாரசபைஅதிகாரிகளுடன், உற்பத்தி நிறுவனங்கள் பரிசோதனை செய்வதிலும் ஈடுபட்டன.

குறித்த நிபுணத்துவக் குழுவில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள்

1. நுகர்வோர் விவகாரம் தொடர்பான அதிகாரசபை

2. சுகாதார அமைச்சகத்தின் கீழ் சுற்றுச்சூழல் உணவு ஊட்டச்சத்து மற்றும் உணவு பாதுகாப்பு திணைக்களம்

3. இலங்கை மருத்துவ சபையின் தொற்றா நோய்கள் உப குழு

இந்த கருத்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் 16 நிறுவனங்களைப் பரிசோதனை செய்வதற்கு இந்த சுயாதீன நிபுணத்துவக் குழு பங்குபற்றியும், 53 நிறுவனங்களில் 84 தேங்காய் எண்ணெய் மாதிரிகளை பரிசோதனை செய்தும், அதன் பின்னர் 07 நிறுவனங்களுக்கு இலட்சினைகளை வழங்குவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெற்றது.

அதேபோன்று இக் கருத்திட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுகின்ற கருத்திட்டமாவதால், 2021 ஆம் ஆண்டில் 173 மாதிரிகளை 74 நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, 19 நிறுவனங்களை சுயாதீன குழு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, 7 நிறுவனங்களிடம் இலட்சினை வழங்கும் ஆற்றல் கிடைக்கப்பெற்றது. அதன்படி தற்போது 14 நிறுவனங்களுக்கு 5 நட்சத்திரங்களைக் கொண்ட தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் சான்றிதழ் குறி வழங்கப்பட்டுள்ளது.

இந்த முழுச் செயற்பாட்டின் ஊடாக, பின்வரும் வகையில் உள்நாட்டு தெங்கு கைத்தொழிலில் முன்னேற்றம் அடைவதற்கு தற்போது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இயன்றுள்ளது.

1. இலவச கொழுப்பு அமில உள்ளடக்கம், அயடின் பெறுமதி, மற்றும் அஃப்லடொக்ஸின் உள்ளடக்கம் ஆகிய விடயங்கள் இலங்கை தரநிலை நிறுவனத்தால் வெளியிடப்பட்ட SLS: 32 தரநிலைக்கு இணங்குகின்றதா என்பது தொடர்பாக ஒட்டுமொத்த கைத்தொழில் துறையிலும் எழுமறையாக மாதிரிகளை பெற்றுக்கொண்டு பரிசோதனை செய்யப்படுவதால், சந்தைக்கு வழங்குகின்ற தேங்காய் எண்ணெய் பின்வரும் வகையில் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.
    1.1 மற்ற எண்ணெய் வகைகள் மற்றும் / அல்லது தரமற்ற தேங்காய் எண்ணெயுடன் குறைந்தபட்ச கலவை.
    1.2 தேங்காய் எண்ணெய் சந்தைப்படுத்தலில் தேங்காய் எண்ணெயின் தரம் பற்றிய கவனம்கொள்ளுதல்.

2.தேங்காய் எண்ணெய் கைத்தொழிலாளர்கள் அதிக அளவில் கைத்தொழிலில் இணைதல்

3.10% ஆக காணப்பட்ட உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி 35% ஆக காணப்படுதல்

மேற்குறிப்பிடப்பட்ட பயன்களைப் பெறுவதற்கு 2018 ஆம் ஆண்டு முதல் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்துள்ளதுடன், 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக பின்வரும் பல செயற்பாடுகளை முன்னெடுத்தும் உள்ளது.

1. இலட்சினை தொடர்பாக ஊடக நிகழ்ச்சித்திட்டங்களைப் பல உயர்மட்ட தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்களில் நடாத்துதல்.

2. சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் உதவியுடன் சமூக வலைதளங்கள் ஊடாக பொது மக்களை தேங்காய் எண்ணெயின் தரம் தொடர்பாக அறிவுறுத்துவதற்கு முடிந்தது.

3. சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக கைத்தொழிலாளர்களை இந்த இலட்சினை தொடர்-பாகவும், அதில் பெற்றுக்கொள்ள முடியுமான பயன்கள் தொடர்பாகவும் அறிவுறுத்து-வதற்கு நடவடிக்கை எடுத்தல்

4. தேங்காய் எண்ணெயில் இருக்க வேண்டிய தரம் தொடர்பாகவும், அதனை பராமரிப்-பதற்காக கைத்தொழிலாளர்களால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும், நிபுணத்துவ பேராசிரியரைக்கொண்டு சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக கைத்தொழிலாளர்களுக்கும் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியாளர்களுக்கும் விரிவுரையொன்றை நடாத்தல்.

5. தெங்கு அபிவிருத்தி அதிகார சபையை அடிப்படையாகக்கொண்டு இலட்சினை தொடர்பாக மேம்பாட்டு நடவடிக்கைகளை மிகவும் பன்முகப்படுத்தியும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றுவதற்கு தரநிலை குறியினை பெற்றுக்கொள்கின்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து சங்கமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கைமேற்கொள்ளுதல். (இந்த சங்கம் ஊடாக தற்போது 2022 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 05 பத்திரிக் கைகளில் அறிவிப்புகளை வெளியிடுவதற்கு ஆற்றல் கிடைக்கப்பெற்றது.

6. 2021 ஆம் ஆண்டில் இந்தச் செயல்முறையை மேலும் திறம்படச் செய்ய நிபுணர் குழுவுடன் 4 கூட்டங்களை நடத்துதல்.

ஆண்டு	**2018.08.01-2018.12.31**	**2019**	**2020**	**2021**	**மொத்தம்**
நிறுவனங்களின் எண்ணிக்கை	57	89	53	74	**273**
மாதிரிகளின் எண்ணிக்கை	90	139	84	173	**486**
தரநிலைக்கு அமைவான மாதிரிகளின் எண்ணிக்கை	45	79	59	133	**316**
பெற்றுக்கொண்டுள்ள மாதிரிகளின் எண்ணிக்கை பிரகாரம், தரநிலைக்கு ஏற்புடையதான மாதிரிகளின் எண்ணிக்கை சதவீதமாக	50%	57%	70%	77%	**65%**
இலட்சினை வழங்குவதற்கு நிபுணத்துவ குழுக்கள் பரிசோதனைளை மேற்கொண்ட, தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களின் எண்ணிக்கை	-	21	16	19	**56**
இலட்சினை வழங்கியுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை	-	-	7	7	**14**

அட்டவணை 4:இலட்சினை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரிகளின் முன்னேற்றம்



படம் 3: 2021 இல்நடைபெற்ற நிபுணர் குழு கூட்டம்





படம் 4: 2021 இல் நிபுணர் குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு

6. உலர்த்திய தேங்காய் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அதாவது, நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக ஆலை அபிவிருத்தி நிதியத்தின்கீழ் பங்களிப்பு வழங்குதல்

ஒவ்வொரு உலர்த்தப்பட்ட தெங்கு உற்பத்தி சதத்திலான பணத் 20 கிராமிற்காக.கி 01 தொகையினை, குறித்த உலர்த்தப்பட்ட தேங்காய் உற்பத்தி நிறுவனத்தின் பெயரில் தாபிக்கப்பட்டுள்ள உலர்த்தப்பட்ட தேங்காய் நிதியத்திடம் வரவு வைக்கப்படு-கின்றது . நவீனமயப்ப சம்பந்தப்பட்ட நிறுவனத்தின்டுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு குறித்த நிதியத்திலிருந்து தேவையான சந்தர்ப்பங்களில் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது20 .21 ஆம் ஆண்டில் ஆலை அபிவிருத்தி நிதியம் மூலம் நான்கு உலர்த்திய தேங்காய் உற்பத்தி நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு ரூபா. மில்லியன் 6.0 ஆன தொகை வழங்கப்பட்டது. இந்த ஆண்டில் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக உற்பத்தி நிறுவனங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.





படம் 5: ஆலை மேம்பாட்டு நிதியத்தின் கீழ்மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்கல் நடவடிக்கைகள்

7. தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களுக்காக மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சலுகை வட்டி கடன் திட்டம் நடைமுறைப்படுத்தல் மற்றும் வட்டி தள்ளுபடிகள் வழங்குவதன் ஊடாக கைத்தொழில்களை அபிவிருத்திச் செய்தல்.

- மக்கள் வங்கியுடன் ஒன்றிணைந்து, "கப்றுக்க நிபயும் திரிய" (கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன்) கடன் உத்தேசத் திட்டம் 2012.05.16 ஆம் திகதி அவ் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமும்பிரதேச , அபிவ ிருத்தி வங்கியுடன் ஒன்றிணைந்து "கப்றுக்க ஜய இசுரு" கடன் உத்தேசத் திட்டம் 2015.02.25 ஆம் திகதி அவ் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமும் ஆரம்பிக்கப்பட்டன அதனூடாக . பதிவிற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைக் கவரக் கூடிய வகையிலும் அதன்மூலம் ,தெங்கு சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தியினை இலகுவாக அடைவதனையும் நோக்கமாகக் கொண்டு மேற்படி குறைந்த வட்டிக் கடன் உத்தேசத் திட்டங்கள் இரண்டினை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

  மக்கள் வங்கியின் "கப்றுக்க உற்பத்தி ஊக்குவிப்புக் கடன்" உத்தேசத் திட்டத்தின் மூலம் வங்கியின் வணிக வட்டியின் கீழ் அக் கடன் தொகையினை 60 தவணைகளில் செலுத்துவதற்கு கைத்தொழிலாளருக்கு வசதி அளிக்கப்பட்டுள்ளது. அவர் குறித்த தவணைகளை உரியவாறு வங்கியிடம் செலுத்தியும், ஏற்புடைய பணிகளை உரியவாறு மேற்கொண்டதாக சான்றுப்படுத்திய பின்னரும், ஆண்டு இறுதியில் அத் தொகைக்காக 6%வட்டி வீதம் கைத்தொழிலாளருக்கு உரித்தாகின்ற வகையில், எஞ்சிய வட்டி தொகையை அதிகாரசபையால் வங்கிஊடாக கைத்தொழிலாளரிடம் மீளளிப்புச் செய்யப்படும். பிரதேச அபிவிருத்தி வங்கியின் "கப்றுக்க ஜய இசுரு கடன் உத்தேசத் திட்டத்தின்" மூலம் நேரடியாக கைத்தொழிலாளர்களுக்கு 6% வருடாந்த வட்டி ஒன்றின் கீழ் கடன் தொகை வழங்கப்படும். இந்த இரண்டு கடன் திட்டங்களும் நிதிசார் கடன் திட்டங்களாகும்.

M 148	ஆர் எம் பீ கொகனட் ப்ரோடக்ட் தனியார் கம்பெனி	11,146			11,146
M 149	மவிக்ஷெல் இன்டர்நெஷனல் கொம் தனியார் கம்பெனி	-	186,250	13,560	199,810
M 150	என்டீசீ எக்ஸ்போர்ட்ஸ் தனியார் கம்பெனி	-	45,000		45,000
M 151	வயம்ப டீ சீ அண்ட் ஓயில் மில்ஸ் தனியார் கம்பெனி	-	32,500		32,500
M 152	சன்மிக் புட் தனியார் கம்பெனி	65,990	181,250		247,240
M 153	நவீக் மில்ஸ் தனியார் கம்பெனி	11,250	7,500		18,750
M 155	வகுருவெல ஓயில் மில்ஸ்	-	10,000		10,000
M 156	வீ எஸ் எஸ் ப்ரடக்ட் தனியார் கம்பெனி	11,250			11,250
M 157	மெட்சு எக்ஸ்போர்ட் தனியார் கம்பெனி	-	7,500		7,500
M 158	வனசிங்க ஹோல்டிங்ஸ் தனியார் கம்பெனி	-	53,750		53,750
		1,321,138	**3,597,500**	**185,830**	**5,104,468**

2021. 12. 31 ஆம் திகதியில் கடனாளிகள் - புதிய தேங்காய் எண்ணெய் மற்றும் கொப்பறா இருப்புக் கட்டணங்கள் மற்றும் பால் உற்பத்தி

	கொப்பறா	தொகை ரூபா
	புதிய தேங்காய் எண்ணெய் ஏலவிற்பனை கட்டணங்கள்	
1	தேசிய கல்நடை வளங்கள் அபிவிருத்தி சபை	188,726.33
2	சிலாபம் பெருந்தோட்ட கம்பெனி	(0.21)
3	தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்	114,074.99
4	தெங்கு பயிர்ச் செய்யும் சபை	116,133.82
5	குருணாகல் பெருந்தோட்ட கம்பெனி	33,646.36
6	எல்கடுவ பெருந்தோட்ட கம்பெனி	119,886.03
7	யாகேரோ தனியார் கம்பெனி	811.63
8	திக்லந்த தோட்டம்	6,705.00
9	எச் எல் டி மெல் மற்றும் கம்பெனி	34,700.01
10	லாலன இ இறப்பர் தனியார் கம்பெனி	61,139.93
11	மெதகம்பொல தோட்டம்	1,384.98
12	கோகலை பெருந்தோட்டக் கம்பெனி	4,275.00
13	சீ அண்ட் ஜே மெதிவ்	39,919.00
14	சீ தீபால் மெதிவ்	1,398.00
15	பொல் கனத்த வத்தை	128.00
16	பீ பீ குணசேகர	117.47
17	மரதன்வில	33,870.18
18	பொல்ட்ரி டிவலொப்மண்ட் கம்பெனி	1,147.50
	மொத்தம்	**758,064.02**

		தேங்காய் பால் உற்பத்தி 2021.12.31		
			2021	மொத்தம்
	பெயர்		தொகை ரூபா	தொகை ரூபா
1	சீ பீ எல் க்லோபல் புட் லிமிடெட்	6,000.00	24,840.00	30,840.00
2	கொன்சொலிடேட் பிஸ்னஸ் சிஸ்டம்	18,000.00	37,750.00	55,750.00
3	ஜாயின்தி எக்ஸ்போர்ட் தனியார் கம்பெனி	6,000.00	65,458.00	71,458.00
4	கன்தெகெட்டிய எக்ரோ ப்ரொடக்ட்ஸ்	6,000.00	74,800.00	80,800.00
5	மன்சி டி கொகோ ப்ரோடக்ட்ஸ்	18,000.00	44,407.00	62,407.00
6	மாஸ் ட்ரொபிகல் புட் ப்ரொசெசின் தனியார் கம்பெனி	18,000.00	46,207.00	64,207.00
7	என் டி சீ எக்ஸ்போர்ட்ஸ் தனியார் கம்பெனி	18,000.00	81,348.00	99,348.00
8	நெக்ஸ்போ கன்வர்ஸன் தனியார் கம்பெனி	6,000.00	6,900.00	12,900.00
9	ரேனுகா எக்ரி புட்ஸ்	18,000.00	77,901.00	95,901.00
10	சில்வர் மில் நெச்சுரல் பெவரேஜஸ்	6,572.61		6,572.61
11	சன்மிக்புட்ஸ் தனியார் கம்பெனி	18,000.00	63,901.00	81,901.00
12	வகுருவெல எண்ணெய் ஆலை	6,000.00	98,292.00	104,292.00
13	விசீ பெருந்தோட்டக் கம்பெனி	572.61	81,348.00	81,920.61
14	புனித அனா தொழிற்சாலை		16,974.00	16,974.00
15	பத்துலஓய		25,461.00	25,461.00
16	பயோபுட்		31,540.00	31,540.00
17	சிலாபம்		9,650.00	9,650.00
18	இயோஸ்		26,310.00	26,310.00
19	கிரிஉல்ல ஆலை		50,301.00	50,301.00
20	மெட்சு		6,210.00	6,210.00
21	நாரா கொகோ		67,141.00	67,141.00
22	நவிக் மில்க்		26,624.00	26,624.00
23	நெஸ்லே		34,300.00	34,300.00
24	நியுட்ரிபல் ட்ரீலர்ஸ்		27,607.00	27,607.00
25	சென்ட் ஜோஸப்		29,394.00	29,394.00
		145,145.22	**1,054,664.00**	**1,199,809.22**

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

மீண்டுவருஞ் செலவினம்

ரூபா

2020	2021 மதிப்பீடு	விபரம்	உப மொத்தம்	2021
				மொத்தம்
ரூபா		**நபர்களின் உழைப்பு**		ரூபா
84,192,276.19	87,000,000.00	சம்பளம் மற்றும் வேதனங்கள்	87,499,393	
18,172,889.42	19,200,000.00	வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் ஏனைய படிகள்	18,282,126	
-		பதில்கடமையாற்றும் படி	148,496	
188,367.00	500,000.00	லீவு தின சம்பளம்	242,138	
18,343,954.37	21,240,000.00	ஊ.சே நிதயம் மற்றும் ஊ.நம்.பொ.நிதியம்	18,845,152	
646,408.12	4,000,000.00	எரிபொருள் படி	1,454,250	
1,334,697.64	7,000,000.00	விசேட படி	1,152,600	
		தொலைபேசி கட்டணங்கள்	2,640,119	
		வாகன படி	250,000	
		மொழி, இடைக்கால படி	20,972	
7,376,178.04	6,000,000.00	மேலதிக நேர கொடுப்பனவு	9,570,872	
2,025,820.00	4,500,000.00	நலனோம்பல் செலவினம்	2,718,840	
353,140.50	2,000,000.00	பயிற்சி மற்றும் கருத்தரங்கு	487,420	
4,921,861.29	6,000,000.00	காப்புறுதி - மருத்துவம்	5,210,450	
		புதிய ஆட்சேர்ப்புச் செலவினம்	640,796	**149,163,624**
137,555,592.57				
		பிரயாணச் சலெவினம்		
3,124,211.33	6,000,000.00	பிரயாணச் செலவினம் உள்நாட்டு	2,493,595	
288,000.00		வாகனங்களை நிறுத்தும் கட்டணங்கள்	251,200	2,744,795
3,412,211.33				
		வழங்கல் மற்றும் தேவைகள்		
7,082,725.89	6,000,000.00	எழுதுகருவி பொருட்கள் மற்றும் ஏனைய தேவைகள்	10,689,784	
		லேபல், புத்தகங்கள் மற்றும் ஸ்டிகர் அச்சீடு		
		மாதாந்த துண்டு பத்திரங்களின் அச்சீடு		
4,396,084.42	8,924,000.00	எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்	5,778,427	
537,870.02	900,000.00	சீருடை	483,999	
13,927,698.89	7,250,000.00	ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொரு	14,962,205	
-		கண்ணாடிப் பொருட்கள்		
1,593,323.07		ஏனைய தேவைகள்		
-		உறுப்பினர் கட்டணங்கள் (தவணைப் பணம்)		31,914,415
27,537,702.29				
		பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு		
2,987,871.32	**3,000,000.00**	கட்டிடங்கள் - கட்டமைப்பு	3,155,654	
1,375,748.54		ஆதிபாத வீதி		
2,429,598.88	3,000,000.00	இயந்திரங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள்	2,505,990	
5,339,480.53	5,000,000.00	மோட்டார் வாகனங்கள்	9,228,406	14,890,050
12,132,699.27				
		போக்குவரத்து தொடர்பாடல், தேவைகள் மற்றும் ஏனைய சேவைகள்		
2,530,590.73	5,100,000.00	தொடர்பாடல்	1,727,777	
1,209,382.12	**2,500,000.00**	போக்குவரத்து	3,968,790	
3,718,960.00	**3,600,000.00**	பாதுகாப்பு சேவைகள்	3,881,250	
2,919,946.20	3,650,000.00	**துப்பரவு சேவைகள்**	3,585,361	
8,711,062.00	8,760,000.00	வாகனங்கள், குத்தகை வாடகை	7,845,092	
4,727,530.91	5,200,000.00	மின்சாரம்	4,865,435	
547,530.94	800,000.00	நீர்	787,869	
1,340,138.04	2,000,000.00	வரிபணம் மற்றும் வாடகை	1,333,872	
-	600,000.00	சட்டக் கட்டணங்கள்	7,500	
245,875.80	300,000.00	தபால் மற்றும் முத்திரை கட்டணங்கள்	206,439	
500,000.00	900,000.00	கணக்காய்வு கட்டணங்கள்	985,872	
33,195.50	66,000.00	வங்கி கட்டணங்கள்	37,219	29,232,476
26,484,212.24				
		குத்தகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்		
966,453.89		பொருளாதார சேவைக் கட்டணங்கள்	590,027	
411,211.59		வெட் வரி		
6,625.00		முத்திரை கட்டணங்கள்	7,125	**597,152**
1,384,290.48				
		ஏனைய		
710,179.07	3,250,000.00	**காப்புறுதி**	837,737	
100,000.00	100,000.00	தலைவர் அவர்களின் உபசரணை செலவினம்	102,143	
956,979.90	2,050,000.00	பணிப்பாளர் சபையின் உறுப்பினர் படிகள் மற்றும் சபை கூட்டத்தி	1,110,779	
2,655,330.63	400,000.00	சந்தை மேம்பாடு/ வர்த்தக அறிவிப்புகள்	1,119,149	
560,847.75		கோவிட் தடுக்கும் செலவினம்	253,451	
20,001.32		ஏனைய செலவினம்	651,103	
		அம்பாந்தோட்டை கருத்திட்டம் - அடிப்படை செலவினம்	198,406	4,272,768
5,003,338.67	5,800,000.00			
213,510,046.85	236,790,000.00	**மொத்த செலவினம்**		**232,815,281**

06. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

2021 ஆம் ஆண்டுக்கு உரியதாக உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் அதிகார சபையின் செயற்பாட்டுப் பிரிவான தயாரிப்பு அபிவிருத்திப் பிரிவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு உட்பட தர நிருவாக மற்றும் தரப் பாதுகாப்புப் பிரிவின் செயற்பாட்டுத் திட்டத்தை தழுவக்கூடியவாறு மற்றும் அதற்கு மேலதிகமாக நிருவாகப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவுகளுக்கிடையிலான செயற்பாடுகளைத் தழுவக்கூடிய வகையில் கணக்காய்வாளர் திணைக்களம் மற்றும் கணக்காய்வு மற்றும் திறைசேரி பிரதிநிதியாளரின் ஆலோசனைகளுக்கு அமைய வகுத்து அமுல்படுத்தப்பட்டது.

இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டங்களுக்கு ஏற்றவாறு கணக்காய்வு பரிசோதனைகளை மேற்கொண்டு 12 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. முகாமைத்துவத்தினால் பொறுப்பளிக்கப்பட்ட விசேட புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், விசாரனைகளுக்குரிய சகல அறிக்கை ஆண்டுக்குள் மேற்கொண்டு முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

6.1.1 அமைப்பு மற்றும் குறை நிறைவெண்

அரச நிறுவனங்களின் சிறந்த நிருவாகத்திற்குரிய வழிகாட்டல்ஆலோசனைக் கையேடு என்ற 2003.06.02 ஆம் திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/12இல் 4.7.1 கொண்ட அத்தியாயம் மற்றும் 2010.12.04 ஆம் திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/55 இற்கமைய தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைத் தாபித்து அச் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய இக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு சபை நிறைவேற்று அல்லாத மூன்று பணிப்பாளர்களைக் கொண்டு அமைந்துள்ளது. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பின்வரும் உறுபினர்களைக் கொண்டு குழு ஒழுங்கமைந்துள்ளது.

2021.03.17 ஆம் திகதி நடைபெற்ற **2021/01**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

1. திருமதி.அய்.டி. நிமேஷா மென்டிஸ் - திறைசேரி பிரதிநிதி
2. திரு.என்.எஸ். வனசிங்க – அமைச்சின் பிரதிநிதியாளர் (குழுத் தலைவர்)
3. திரு. பிரியலத் கிம்பியஹெட்டிகே - அங்கத்தவர்
4. திரு.உபாலி தம்மிக த சில்வா - அங்கத்தவர்

2021.12.01 ஆம் திகதி நடைபெற்ற **2021/02** கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

1. திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ் (திறைசேரி பிரதிநிதி) - குழுத் தலைவர்
2. திருமதி ஆர்.பீ.கஸ்துரிஆரச்சி - அமைச்சின் பிரதிநிதியாளர்
3. திரு. பிரியலத் கிம்பியஹெட்டிகே - அங்கத்தவர்

2021.12.29 ஆம் திகதி நடைபெற்ற **2020103** கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

1. திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ் (திறைசேரி பிரதிநிதி) குழுத் தலைவர்
2. திருமதி ஆர்.பீ.கஸ்துரிஆரச்சி - அமைச்சின் பிரதிநிதியாளர்
3. திரு. பிரியலத் கிம்பியஹெட்டிகே - அங்கத்தவர்

கணக்காய்வாளரின் பிரதிநிதி 2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற எல்லா கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களில் பங்குபற்றினார்.பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், அனைத்து கூட்டத்திலும் பங்கேற்றுள்ளார். குழுவில் முகாமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் எவரும் இல்லை. பணிப்பாளர் நாயகத்தின் அழைப்பிற்கு அமைய கூட்டத்திற்காக பங்கேற்க நடவடிக்கை எடுக்கப்படும். முகாமைத்துவத்தின் ஏனைய அங்கத்தவர்களின் பங்கேற்பு குழுவிற்குத் தேவையான வேளையில் கூடுவதற்காக பங்கேற்பதற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. குழுவின் குறை நிறைவெண் 03 அங்கத்தவர்களாகும்.

6.2 குழுவின் செயற்பாட்டுப் பொறுப்புக்கள்

- இறுதிக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்ட அறிக்கையினை மீளாய்விற்கு உட்படுத்தி குழுவின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை உரியவாறு அமுல்படுத்துவது தொடர்பாகக் கண்டறிதல்.

- மாதிரி மற்றும் உள்ளடக்கத்தை மீளாய்விற்கு உட்படுத்தவும் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நிதி அறிக்கைப்படுத்தும் முறையின் நம்பகத் தன்மையினை மேற்பார்வைக்கு உட்படுத்தல்.

- உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வுப் பணிகளில் விடய மூல அம்சம் மற்றும் பயனை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகளின் ஒழுங்கமைவு மற்றும் ஆய்வுளை மேற்கொள்ளல்.

- உள்ளக நிருவாகத்தின் தகைமை மற்றும் வெற்றியினை மீளாய்விற்கு உட்படுத்தலும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தலும்.

- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், வெளிக் கணக்காய்வுகள் மற்றும் அதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளை மீளாய்விற்குட்படுத்தல்.

- மேற்பார்வை மற்றும் நிதி அறிக்கைப்படுத்தலின் தேவைகளுடன் உட்படல் மற்றும் உரிய மேற்பார்வையினை அதிகார சபையிடம் காணப்படும் இணைப்பினை உறுதிப்படுத்தக் கூடிய ஒழுக்க விழுமியங்கள், தரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்விற்கு உட்படுத்தவும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தலும்.

6.3 கூட்டங்கள் மற்றும் செயற்பாடுகள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் மூன்று (03) தடவைகள் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன. குழுக் கூட்டத்திற்காக குழுவின் அங்கத்தவர்களின் சமூகமளிப்பு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

பணிப்பாளரின் பெயர்	பங்கேற்றோர்களின் எண்ணிக்கை
திருமதி. அய்.டி.நிமேஷா மென்டிஸ்	03
திரு. என்.எஸ் வணசிங்க (2021 - 01)	01
திருமதி ஆர்.பீ.கஸ்துரிஆரச்சி	02
திரு. பிரியலத் கிம்பியஹெட்டிகே	03
திரு.உபாலி தம்மிக த சில்வா	01

அட்டவணை 33 - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள்

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் குழுவினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன.

6.3.1 உள்ளகக் கணக்காய்வு

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின்செயற்பாடுகளுக்கு உரியதாக 2021 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வாளர் திணைக்களத்தின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு வேலைத் திட்டங்கள் மற்றும் கணக்காய்வுத் திட்டங்களை கலந்துரையாடலுக்கு உட்படுத்தி தொடர்ந்தும் கணக்காய்விற்கு உட்படுத்த வேண்டிய துறைகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் கணக்காய்வு வேலைத்திட்டங்கள் உட்பட கணக்காய்வுத் திட்டங்களை சபையின் அங்கீகாரத்திற்காக பரிந்துரை செய்தல்.
- 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களை அமுல்படுத்தும் போது உற்பத்தித் திறன் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு விடையளிப்பதில் உள்ள முன்னேற்றத்தின் மதிப்பீடு.
- எதிர்காலத்தில் மீண்டும் சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் சமகால திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்குடன் விசேட உள்ளகக் கணக்காய்வு தேடல்கள் மற்றும் அவற்றிற்காக முகாமைத்துவத்தின் வரவேற்பு மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

6.3.2 வெளியகக் கணக்காய்வு

- 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பிலாக கணக்காய்வுத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுகளுக்கு உரியதாக முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்ட பதில்கள் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன், விசேடமாகக் காண்பிக்கப்பட்ட பிரச்சினைகள் மீண்டும் எழுவதைத் தடுக்கும் வகையில் முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்ட திருத்தியமைக்கும் செயற்பாடுகள் தொடர்பாக பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2020.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக குழுவால் கவனம் செலுத்தியுள்ளதுடன், குறித்த விடயங்களுக்கு ஏற்புடையதாக மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பான பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- 2021.01.21 ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற் கூட்டத்தில் வழங்கியுள்ள பரிந்துரைகள் தொடர்பாகவும் அவற்றை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் தொடர்பாகவும் குழுவால் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான பின்னாய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

6.3.3 நிதி அறிக்கைப்படுத்தல்

- வருடாந்த கணக்காய்விற்கு உட்பட்ட நிதி வெளிப்பாட்டு மேற்பார்வை மற்றும் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையினால் பணிக்கப்படட் தேவைகள் மற்றும் உரிய கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் போது சபைக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

6.3.4 கூட்ட அறிக்கை / சபையின் அறிக்கைப்படுத்தல்கள்

- குழுவின் நிலைப்பாடுகள் தொடர்பாக பொருத்தமான கூட்ட அறிக்கை சபை செயலாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது. கூட்டங்களின் சகல அறிக்கைகளும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் , பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை அமுல் படுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படும். கிரமமான அடிப்படைக்கு அமைய மிக முக்கியமான விடயங்கள் தொடர்பில் பின்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதிகார சபையின் ஒப்பீட்டுக் கோட்பாடுகள் மற்றும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

07.தணிக்கை அறிக்கை

தலைவர்
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று,தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154 (6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து,அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் 24(அ) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் பாதீடு செய்யப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை வெவ்வேறாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் நிதிக் கூற்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளில் பாதீட்டு வருமானம் மற்றும் வருமானத்தின் ஏற்றத்தாழ்வுகள் குறிப்பிடப்படவில்லை.

(ஆ) திரட்டிய மிகைக்கு சீராக்கப்பட்ட முன்னரான ஆண்டின் சீராக்கல் ரூபா.1,474,281 ஐ காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழில்பாட்டு செயற்பாடுகளில் உற்பத்தியாகிய காசுப் பாய்ச்சலுக்கு சீராக்கப்படுதலும், 03 மாதங்களிள் முதிர்வடைகின்ற ரூபா.376,499,131 ஆன 20 நிலையான வைப்புகள்,ரூபா.11,237,375 ஆன 06 திறைசேரி உண்டியல்கள் மற்றும் ரூபா.71,963,410 ஆன 03 சேமிப்பு கணக்குகள் காசும் காசுக்கு சமமானவைகளாக காட்டப்படாது, முதலீட்டு செயற்பாடுகளின்கீழ் காண்பிக்கப்படுதல் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் காசுப் பாய்ச்சல்

கூற்று இலங்கை பொது துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் ஒழுங்குவிதிகளுக்கமைவாக தயாரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) முற்று முழுதாக தேய்மானம் செய்திருந்த செலவினம் ரூபா.88,827,013 ஆன ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தற்போது பயன்படுத்திய போதும், குறித்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பில் மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 69 ஆவது பந்தி பிரகாரம், சொத்துக்களை பயன்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு உரிய பணியில் பயன்படுத்துவதற்கு தொடங்கியபோது, குறித்த சொத்துக்களின் தேய்மானம் ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், 2011 – 2018 ஆகிய காலப்பகுதிக்குள் கொள்வனவு செய்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களின் பொருட்டு பயன்படுத்தாதிருந்த ரீடுஊ உபகரணம் அடங்கலாக செலவினம் ரூபா.17,714,910 ஆன 12 உபகரணங்கள் கொள்வனவு செய்த ஆண்டு தொடக்கம் வருடாந்தம் 20மூ என்ற வகையில் தேய்மானம் செய்யப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் பயன்படுத்தாத 08 உபகரணங்களின் பெறுமதி பூஜ்ஜியமாகி இருந்ததுடன், சொத்துக்கள் மற்றும் திரட்டிய மிகை ரூபா.12,577,364 எனற் வகையில் குறைவாகவும், செலவினம் ரூப.3,205,365 அதிகமாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ)இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இல் 33 ஆவது பந்தி பிரகாரம்,கொடுக்கல்வாங்கல் மற்றும் சார்ந்த பொருளாதார நலன்கள் அல்லது சேவை ஆற்றல்கள் நிறுவனத்திடம் வருவதாக நம்பிக்கை உள்ளவிடத்தும் வருமானத்தின் அளவு நம்பகமாக அளவிட முடியுமான போதும் அவற்றை வட்டி வருமானமாக அடையாளம் காணப்படல் வேண்டுமாயினும், 36 ஆண்டுகளாக அறவிடப்படாத பிசீசீ லங்கா கம்பெனியின் ரூபா. 26,715,037 ஆன கடன் மீதி பொருட்டு வருடாந்தம் ரூபா.4,011,609 என்ற வகையில் வட்டி வருமானம் கணக்கிடப்பட்டு, குறித்த பெறுமதி சந்தேகத்திற்கிடமான கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கும், கடன் மீதிக்கான இழப்பீட்டு பெறுமதி பொருட்டு தேவையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) பெறுமதியின்றி நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் உள்ளடக்கியிருந்த துன்கன்னாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் உள்ள 16 இயந்திரங்கள், 17 கணினி மற்றும் துணைக் கருவிகள், 04 தளவாட உபகரணங்கள் மற்றும் ஏனைய 65 சொத்துக்கள் மதிப்பீடு செய்து கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(எ) அதிகார சபையால் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் எழுதுகருவி பொருட்கள் மற்றும் ஏனைய நுகர்வு பொருட்கள் தொடர்பான பௌதீக இருப்புகளில் மீளாய்வு செய்திருப்பினும், அந்த அறிக்கையில் உள்ளடக்கியிருந்த இருப்புகள் அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கை பிரகாரம், முன்னராக கிடைக்கப்பெறுதல் முன்னராக வழங்குதல் (குஜகுழு) முறைக்கு மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படாமையால், நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கியுள்ள புத்தகங்களின் பிரகாரம் எஞ்சிய ரூபா.21,501, 463 ஆன செவ்வைப்படுத்தலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியவில்லை.

(ஏ) பிரதான அலுவலக களஞ்சியத்தின் இருப்புகளில் அகற்றப்பட்டு சம்ந்தப்பட்ட பிரிவுகளிடம் வழங்கிய ரூபா.2,962,845 மதிப்புள்ள 1,649,010 ஸ்டிகர்கள் மற்றும் 105 வகைகளுக்குரிய ரூபா.8,427,201 மதிப்புள்ள இரசாயனப் பொருட்கள, கண்ணாடிப் பொருட்கள் மற்றும் ஊடக உபகரண இருப்புகள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் அந்தப் பிரிவுகளில் எஞ்சியிருந்த போதிலும், அவற்றை பௌதீக ரீதியாக மீளாய்வு செய்து இருப்புகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக ரூபா.11,390,046 ஆன நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கியிருந்த தொகை குறைவாகவும், செலவினம் அதிகமாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 11 இராசயண வகைகளை பல குறியீடுகளின் களஞ்சிய தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக களஞ்சிய பேரேடு கணக்கு மற்றும் பௌதீக இருப்புகளின் மீளாய்வு அறிக்கைகளின் மாதிரி பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டமையால், குறித்த இரசாயனப் பொருட்களின் இருப்புகள் கிடைக்கப்பெறுதல் மற்றும் வழங்குதல் செவ்வையாக கணக்கு வைக்கப்படுவதில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(ஒ) உலர்த்தப்பட்ட தேங்காய் ஆலை உரியையாளர்களிடம் சேவை வழங்குதல் மற்றும் பணம் அறவிடுவதற்காக இன்வொயிஸ் வழங்கப்படாமை, கடனாளிகளின் பேரேடு மற்றும் கடனாளிகளின் கட்டுப்பாட்டு கணக்கு பராமரிக்கப்படாமை, பணம் அறவிடுவதற்காக உரிய முறை அறிமுகப்படுத்தாமை, வங்கியிடம் நேரடியாக வரவு வைக்கப்படும் பணத் தொகை அடையாளம் காணும் தகவல் தொழில்நுட்ப முறைகள் இல்லாமை போன்ற விடயங்களின் படி விற்பனை மற்றும் கடனாளிகள் தொடர்பில் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறை உள்ளதாகவும், கடனாளிகள் மற்றும் வருமானம் செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை. மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளின் படி அந்த வருமானம் ரூபா.11,057,590 ம், கடனாளிகளின் மீதி ரூபா.5,104,468 ம் என்ற வகையில் காணப்பட்டதுடன், வருமானம் திரட்டும் பிரிவால் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் படி அந்த வருமானம் ரூபா.9,794,902 மற்றும் கடனாளிகளின் மீதி ரூபா.4,377,852 என்ற வகையில் காணப்பட்டது.

(ஓ) நிதிக் கூற்றுகளில் "சுநஉநவை ஐஎ யுனஎயஎெந" என்றவகையில் நடைமுறை சொத்துக்களின் கீழ் உள்ள ரூபா.2,391,232 ஆன அடையாளம் காணப்படாத மீதிகளுக்கிடையில் ஒழுங்குமுறையில் ரூபா. 335,750,ரூபா.460,627 மற்றும் ரூபா.912,000 என்ற வகையில் மொத்தம் ரூபா.1,708,377, தொகை 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக வாடிக்கையாளர்களால் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பரிசோதனை கட்டணங்கள் மற்றும் பதிவு செய்தல் கட்டணங்களின் வருமானமாக அவதானிக்கப்பட்டது. ஆயினும், இந்த மீதிகள் செவ்வையாக நிதிக் கூற்றுகளில் சீராக்கப்படாமை காரணமாக ரூபா.1,708,377 ஆல் நடைமுறை பொறுப்புகளின்கீழ் அதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன், மீளாய்விற்கான ஆண்டின் வருமானம் ரூபா.460,627 ஆலும், திரட்டிய மிகை ரூபா.335,750 ஆலும்,இதன் பின்னர் கிடைக்கப்பெற வேண்டியவைகள் ரூபா.912,000 ஆலும் குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 20 கடன்கொடுநர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா.70,527,249 ம், 92 கடனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.15,236,329 இற்கும் மீதிகளை உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அந்த மீதிகளின் செவ்வைத்தன்மை மற்றும் நிலை தொடர்பாக கணக்காய்வில் திருப்தியடைய முடியவில்லை.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,தெங்கு அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தெங்கு அதிகாரசபையைகலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தெங்கு அதிகாரசபையின்நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப்

பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின்தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்புகொள்கின்றேன்.

2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் அதிகார சபை பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (ஐஐஐ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி அதிகார சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (�ை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி இவ்வறிக்கையில் (அ), (இ), (உ), (ஊ), (எ), (ஒ)

ஆகிய பந்திகளில் குறிப்பிடுகின்ற அவதானிப்புகள் தவிர்ந்து,கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனுமொரு உறுப்பினர் பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பதையும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது நிறுவனம் செயற்பட்டுள்ளது என்பதையும்,

சட்டங்கள் விதிகள் என்பவற்றின் தொடர்	இணங்காமை
(அ) 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 (ஆ) பிரிவு, 2004 ஆம் ஆண்டு யூன் 29 ஆம் திகதிய 25 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2006 ஆம் ஆண்டு யூன் 27 ஆம் திகதிய இலக்கம் ீநு.ீநு.்.9 9 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	அரச தொழில்முயற்சிகளின் நிதியை நிலையான வைப்புகளில் முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சர் அவர்களது இணக்கப்பாடும் ஏற்புடைய அமைச்சர் அவர்களின் அனுமதியும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமாயினும், அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் 40 நிலையான வைப்புகளில் முதலீடு ரூபா.739,847,663 இற்காக அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையில் 11 அத்தியாயத்தின் 13.3 மற்றும் 13.7 பந்திகள்	வெற்றிடமாகியுள்ள பதவிக்காக முழுநேர காலத்திற்கு உத்தியோகத்தர் ஒருவரை தாமதமின்றி நியமனம் செய்தல் வேண்டுமென்பதுடன், கடமைகளை நிறைவேற்றும்-போது மேலதிக ஊதியம் பெற்றுக்கொள்வ-தற்கான உரித்துகள் கிடையாது. ஆயினும், அதகிர சபையின் (நிருவாகம்) அடங்கலாக 03 பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 03 உத்தியோகத்தர்கள் 02 ஆண்டுகள் 03 மாதங்கள், 02 ஆண்டுகள் 08 மாதங்கள் மற்றும் 03 ஆண்டுகள் 04 மாதங்கள் தொடக்கம் நியமனம் செய்து

	அதற்காக மாதமொன்றுக்கு ரூபா.29,201 என்ற வகையில் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா.924,220 என்ற வகையில் படி வழங்கப்பட்டிருந்தது.
(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை நி.ஒ.விதி 371	பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டநிதி ஏற்புடைய பணி முடிவடைந்தவுடன், சீராக்குதல் வேண்டுமாயினும், 18 சந்தர்ப்பங்களில் 15 உத்தியோகத்தர்களிடம் வழங்கியிருந்த ரூபா. 801,990 ஆன முற்பணம் சீராக்குவதற்கு 30 நாட்கள் தொடக்கம் 246 நாட்களுக்கிடையிலான காலம் எடுத்திருந்தது.

(அ) 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் ''உலர்த்திய'' தெங்கு கைத்தொழில் அபிவிருத்தியின் பொருட்டு, ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு உலர்த்திய தேங்காய் கி.கி. 1 இற்காக 20 சதவீதம் செஸ் நிதியத்திலிருந்து கிடைக்கப்பெறும் பணத்தொகை அந்தந்த ஆலை உரிமையாளர்களின் பெயரில் சேமிப்பு வங்கி கணக்குகளில் வைப்புச் செய்து,ஆலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 1980 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டிருந்த ஆலை அபிவிருத்தி நிதியம் பொருட்டு 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற செஸ் வருமானம் மற்றும் வங்கி வட்டி வருமானத்தின் மொத்தம் ரூபா.208,494,784 ஆயினும், மீளாய்விற்கான ஆண்டில் 04 ஆலைகளை நவீனமயப்படுத்துவதற்கு வழங்கியிருந்த தொகை திரட்டிய நிதியத்தில் 3மூ ஆகியதுடன்,ரூபா.3,216,952 மட்டும் ஆகியதால் ஆலை அபிவிருத்தி தொடர்பில் உரயி நிகழ்ச்சித்திட்டம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம், தேங்காய் எண்ணெயை கூடுதலாக கொள்வனவு செய்து விலை ஏற்றத்தாழ்வுகளுக்கு அமைவாக சந்தைக்கு விநியோகிப்பதன் மூலம் விலை கட்டுப்படுத்தும் நோக்கில் தேங்காய் எண்ணெய் விலை நிருணயித்தல் நிலைப்படுத்தல் நிதியம் தாபிக்கப்பட்டிருப்பினும், 1981 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிகழ்ச்சித்திட்டம் அதிகார சபையால் கைவிடப்பட்டு அதற்காக துறைமுகத்தில் பராமரிக்கப்பட்டிருந்த எண்ணெய் தாங்கிகளையும் வேறு நிறுவனங்களிடம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், 1985 ஆம் ஆண்டு தொடக்கம் நிலுவையாக காணப்பட்ட ரூபா. 78,865,954 அன கடன் தொகை உட்பட மொத்தம் ரூபா.160,885,535 ஆன அறவிடப்பட வேண்டிய கடன் மீதியும்,ரூபா. 232,281,453 அன முதலீடு மீதி மற்றும் ரூபா.334,956,888 ஆன திரட்டிய நிதி மீதியுடன் மீளாய்விற்கான ஆண்டு வரை நிதியத்தின் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டன.

2.2.4. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும்,

(அ) நாராஹேன்பிட்டிய தலைமை அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டில் ரூபா.4,092,743 ஐ செலுத்தப்பட்டு மேற்கொண்ட மின்சார அபிவிருத்தி நடவடிக்கைகள் உரிய வகையில் மேற்கொள்ளாமை காரணமாக, அதன் பொருட்டு மீண்டும் 2021 ஆம் ஆண்டில் ரூபா.1,400,200 ஆன தொகை செலவிட நேரிட்டது.

(ஆ) தெங்கு சாரந்த உற்பத்தி தொடர்பில் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மற்றும் ஒழுங்குப்படுத்தல் பணிகள் முறைசார்படுத்தும் பொருட்டு கைத்தொழிலாளர்களிடம் தொடர் இலக்கத்துடன் கூடிய ஸ்டிகர் வகையிலான லேபல் முறை அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு தேவை அடையாளம்காணாது 2016 – 2018 ம் இடைப்பட்ட காலப்பகுதியில் ரூபா.11,626,311 ஐ செலவிடப்பட்டு 07 வகைப்படுத்தலின் கீழ் அச்சிடப்பட்டஸ்டிகர் 6,573,831 ஆல்

மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா.8,358,002 பெறுமதியான 72மூ ஆன ஸ்டிகர் 4,725,841 எஞ்சியிருந்ததுடன், ஸ்டிகர் கொள்வனவு செய்வதற்காக கைத்தொழிலாளர்களின் முயற்சி குறைவடைதல் காரணமாக குறித்த எஞ்சிய இருப்பு பொருளாதாரமற்ற செலவினம் என அவதானிக்கப்படுகிறது.

(இ) முன்னராக திட்டமிடப்பட்ட பணியல்லாத தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் நாராஹேன்பிட்ட தலைமை அலுவலகம் முன்பாக 12ஒ9 அளவில் ீ5அளவுருக்களின் கீழ் டுநுனு டிஜிரல் திரை தாபிக்கும் ஒப்பந்தம் விவரக் குறிப்புகளை பூர்த்தி செய்து ரூபா5,196, 879 ஆன ஆகக் குறைந்த விலை கணக்கு சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடம் வழங்குவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மீது பெறுகை குழுவால் அங்கீகரித்திருக்கையில், மின்அஞ்சலில் பின்னராக பெற்றுக்கொண்டரூபா.183,000 ஆன அதிக விலை கணக்குகளை சமர்பித்திருந்த நிறுவனத்திடம் மீண்டும் உசாவி ரூபா.4,998,000 ஆன விலைக்கு முறையான உடன்படிக்கையின்றியும் செயலாற்றுகை காப்புறுதி ரூபா.249,900 ஆல் குறைவாக பெற்றுக்கொண்டு அவ் அலுவலை ஒப்படைத்து அதற்காக ரூபா.999,600 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தேங்காய் உற்பத்தியில் உள்ளடங்கும் சீனி மட்டம், வைட்டமின் மட்டம், கழிவுபொருள் மட்டம் ீயுர்) பரிசோதனை செய்தலும்,ஏற்றுமதி செய்யப்படுகின்ற உலர்த்தப்பட்ட தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயில் ளுடுளு 98:2013 ஆம் இலக்க தரத்தின் படி காணப்படும் எப்லடொக்ஸின் பரிசோதனை செய்வதையும் நோக்கமாகக்கொண்டு 2017 ஆம் ஆண்டில் ரூபா.6,590,685 இற்கு கொள்வனவு செய்த ர்பை ீநசகழசஅயஎந டுஙரனை ஊாசழஅழ வி பசயிா (ரீடுஊ) இயந்திரத்திற்காக 2019 மற்றும் 2021 ஆண்டுகளில் மேலும் ரூபா.9,107,192 ஐ செலவிடப்பட்ட துணைக் கருவிகளையும் கொள்வனவு செய்திருந்த போதிலும், கொள்வனவு செய்த திகதி தொடக்கம் குறைப்பாடுகள் பதிவாகுதல் மற்றும் ஆய்வுகூடத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாதிருக்கையில் இயந்திரம் கொள்வனவு செய்தல் மற்றும் பகுப்பாய்வு ஊழியர் வெற்றிடங்கள் நிலவுதல் ஆகிய விடயங்களால் இயந்திரம் பயன்படாதிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் இயந்திரத்தின் உத்தரவாதக் காலம் முடிவுற்று இருந்தது. மேலும் தொழில்நுட்ப அறிவுள்ள சுயாதீன உத்தியோகத்தரைக் கொண்டு இயந்திரம் பரிசோதனை செய்யாது எல்லா வகையிலுமான கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்விற்கான ஆண்டில் ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்யாதிருக்கையில் மற்றும் தேவைகள்

இல்லாதிருக்கையில் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு ஒழுங்கமையாத வகையிலும் சிக்கனமற்ற வகையிலும் மின்அஞ்சல் முகவரிக்கு விலை கணக்குகளை பெற்றுக்கொண்டு நாராஹேன்பிட்ட தலைமை அலுவலகத்தின் தலைவரின் அறைக்காக ரூபா.1,314,890 ஐ செலவிடப்பட்டு ரூபாவாகினி இயந்திரம்,யூடுநு ஐ ீயுனு ீசுழு 12.9'' 256 புடீ உபகரணம் மற்றும் 758 டு போட்ல் கூலர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கணினி மற்றும் துணைக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகை திட்டத்தில் ஒதுக்கீடு செய்த தொகை ரூபா 3,154,000 ஆயினும், அதிலும் பார்க்க ரூபா.1,431,150 தொகை அதிகமாக செலுத்தப்பட்டு 13 கணினிகள், அச்சீட்டு இயந்திரம் மற்றும் மடி கணினி (லெப்டொப்) கணினிகள் 13 ஐ கொள்வனவு செய்திருந்ததுடன், 13 மடிகணினிகளை கொள்வனவு செய்வதற்காக பெறுகை குழுவிடம் முன்வைக்காது அதிகார சபையின் தலைவர் அவர்களது அனுமதிக்கமைவாக விலைமனுக்களை பெற்றுக்கொள்ளுதல் தொடக்கம் அவற்றை கொள்வனவு செய்வதற்கு கட்டளையிடல் வரை அனைத்து பெறுகை பணிகளையும் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்டு செயலாற்றுகை காப்புறுதியும் பெற்றுக்கொள்ளாது கொள்வனவுகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) கழிவு நீர் பரிசோதனை, உலர்த்தப்பட்ட தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய் அடங்கலாக தேங்காய் உற்பத்திகளில் வன்உலோகம், கழிவு பொருட்கள் மற்றும் போ'ாக்கு ஆகிய தரங்கள் தொடர்பான பரிசோதனை பொருட்டு அதிகார சபையால் 2008 – 2020 ஆண்டு காலப்பகுதிக்குள் ரூபா.35,057,502 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட பரிசோதனை உபகரணங்கள் மற்றும் 23 பொருட்கள் 2021 ஆம் ஆண்டு இறுதி வரை பயன்படுத்தாது இருப்பதாக அவதானிக்கப்பட்டது. அதன் காணரமாக தெங்கு உற்பத்தி தரத்திற்கமைவாக மேற்கொள்ளப்படுவதாக சான்றுப்படுத்தும் பொறுப்பை நிறவேற்றுவதற்கு முடியாதிருந்ததுடன், அதிகார சபைக்கு வருமானமும் கிடைக்கப்பெறவில்லை.

(ஊ) அதிகார சபைக்குரிய 04 மாடிகளைக்கொண்ட 17,866 சதுர அடியிலான கொழும்பு கோட்டை அலுவலகத்தின் 7.754 சதுர அடியைக்கொண்ட முதலாவது மாடி மற்றும் மூன்றாவது மாடி 2018 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் தொடக்கம் மாற்றுப் பயன்பாடின்றி காணப்பட்டது.

(எ) சனாதிபதியின் பதவியேற்றலில் இரண்டாம் ஆண்டு பூர்த்திக்காக 'வாழ்த்துக்கள் தெரிவிக்கும் பத்திரிக்கை அறிவிப்பை வடிவமைப்பதற்காக ரூபா.75,600 செலவிடப்படல், நேர்வரிசை இராஜாங்க அமைச்சு மூலம் அச்சிடப்பட்ட ''அபேக்'ா கப்ருக்க'' என்ற புத்தகத்தின் 150,000 பிரதிகளை அச்சிடுவதற்கு ரூபா.8,181,000 ஐ கொடுப்பனவு செய்தல் அதிகார சபையின் நோக்கங்களுக்கு முரணானதாக அவதானிக்கப்பட்டது.

(ஏ)அதிகார சபையின் நாராஹேன்பிட்ட தலைமை அலுவலகத்தின் முன்பாக தலைவர் அவர்களின் பொருட்டு ஒரு பகுதியை இணைத்தல் மற்றும் கொழும்பு கோட்டையில் பராமரிக்கப்படுகின்ற அலுவலகத்தில் விற்பனை நிலையம் நிருமாணிக்கும் பொருட்டு ஒதுக்கீடுகள் இல்லாதிருக்கையில், அதற்கான திட்டமிடல்களை மேற்கொள்வதற்காக இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த ரூபா.1,200,000 ஆன ஆலோசனை கட்டணத்தில் முதலாவது தவணையாக தனிப்பட்ட ஆலோசனை கம்பெனியிடம் லுத்தப்பட்டிருந்த ரூபா.300,000 ஆன குறித்த கருத்திட்டம் பொருட்டு திறைசேரியின் அனுமதி

வழங்கப்படாமை காரணமாக உரிய நிருமாணிப்புகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் 259 அன அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20மூஆன பதவிகள் 52 ஆண்டுகள் தொடக்கம் வெற்றிடமாக காணப்பட்டதுடன், பணிப்பாளர் (நிருவாகம்) மற்றும் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் சர்வதேசம்) ஆகிய சிரேட்ட முகாமைத்துவ பதவிகள் 2 ம் அவற்றுக்கிடையில் காணப்பட்டது. தேவைக்கமைவாக குறித்த வெற்றிடங்களை பூர்த்தி செய்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ)அதிகார சபையின் கீழ் உள்ள தேங்காய் எண்ணெய் விலை நிருணய நிதியம் மற்றும் மூலதன அபிவிருத்தி நிதியம் என்பவற்றிடமிருந்து டீ.ஊ.ஊ லங்கா கம்பெனியிடம் 1985 ஆம் ஆண்டில் வழங்கியிருந்த கடன் தொகை ரூபா.26,715,037 மற்றும் 2002 மற்றும் 2004 ஆகிய ஆண்டுகளில் வழங்கியிருந்த கடன் ரூபா.431,550,000 தொகை மற்றும் அதற்கான வட்டி தொகை ரூபா.56,162,526 என்ற வகையில் மொத்தம் ரூபா.114,427,563 அன தொகை 36 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் தொடக்கம் நிலுவையாக காணப்பட்டதுடன், அந்த பணத்தொகை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஈ) 2018,2019, மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் உலர்த்தப்பட்ட தேங்காய் மாதிரிகளை பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுடன், 33 ஆலை உரியைமாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.1,321,138, உலர்த்திய உற்பத்திகளின் பொருட்டு பதிவுசான்றிதழ் பெற்றுக்கொள்ளாத 15 ஆலைகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.1,119,599 மற்றும் 13 தேங்காய்ப் பால் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா.145,144 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ)தெங்கு சார்ந்த உற்பத்திகள் தொடர்பில் விண்ணப்பத்தாரிகளால் முன்வைக்கப்படும் உலர்த்திய தேங்காய், தேங்காய் எண்ணெய், தும்புநார், நீர், பின்னாக்கு, கொப்பறா மற்றும் தும்புநார் என்பவற்றின் மாதிரிகளை பரிசோதனை செய்து அதிகார சபையின் ஆய்வுகூடங்கள் ஊடாக 05 நாட்கள் மற்றும் 10 நாட்கள் என்ற காலப்பகுதிக்குள் பரிசோதனை அறிக்கைகள் வழங்கப்படுதல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் 60 பரிசோதனை அறிக்கைகளை 14 – 118 காலப்பகுதி தாமதமாக்கப்பட்டு வழங்கியிருந்ததுடன், பரிசோதனை அறிக்கை பதிவேடு இற்றைப்படுத்தி பராமரிக்கப்படவில்லை.

(ஊ)தெங்கு உற்பத்திகளை நுகர்வோரிடத்தில் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு 2014 ஆம் ஆண்டில் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்திடம் ரூபா.9,344,832 செலுத்தப்பட்டிருப்பினும், பிரச்சார நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாமை காரணமாக மீள செலுத்தப்பட வேண்டிய ரூபா.7,060,032 ஆன தொகை மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை அறவிடுவதற்கு இயலாமை பிரச்சினைக்குரிய விடயமாகியதுடன், இந்த பிரச்சார கருத்திட்டம் நடைமுறைப்படுத்துகையில் நிதி

முறைக்கேடு ஏற்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு புலனாய்வு ஆணைக்குழு மற்றும் சனாதிபதி புலனாய்வு அலகினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் முன்னேற்றம் தொடர்பாக கண்டறியப்படவில்லை. செலவிடப்பட்ட ரூபா.2,284,800 ஆன தொகையில் ரூபா.2,280,000 தொகை 6 பிரச்சார விளம்பரங்களை தயாரிப்பதற்காக இருப்பினும், குறித்த விளம்பரங்களை ஒளிபரப்புச் செய்யாமையால் பொருளாதாரமற்ற செலவினமாக காணப்பட்டது.

டப்.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி